# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 1 திங்கட்கிழமை (17-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:295


## ஆயிரத்து 200 படையினரை ஏற்றிவந்த

# துருப்புக்காவி கப்பல் மீது புலிகள் பெரும் தாக்குதல்!

## பருத்தித்துறைக் கடலில் பல மணிநேரம் சமர்! டோறாவுடன் ஏழு சிப்பாய்களைக் காணோம்!!

கொழும்பு,செப்ரெம்பர்.17

**திருகோணமலையில் இருந்து ஆயிரத்து இருநூறு படையினரை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறை நோக்கி வந்துகொண்டிருந்த படையினரின் துருப்புக்காவி (Troop carrier) கப்பல் மீது நேற்றுக்காலை பருத்தித்துறைக் கடலில் வைத்துக் கடற்புலிகள் பெரும் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.**

**பருத்தித்துறைக்கு வடகிழக்கே 26 கடல் மைல் தொலைவில் வைத்து கப்பலை வழிமறித்த கடற்புலிகளின் படகு அணிகள் அதன் மீது தாக்குதல் தொடுத்தன. இதனையடுத்து அங்கு பல மணி நேரம் உக்கிர கடற்சமர் இடம்பெற்றது.**

'பிறைட் ஒவ் சவுத்' என்ற துருப்புக் காவிக் கப்பல் மீதே நேற்றுக் காலை 7.30 மணியளவில் புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

சமார் 20 படகுகளில் வந்த கடற்புலிகள் கப்பலைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். படையினரின் கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கியபடி வந்து கொண்டிருந்த கடற்படைப் படகுகள் மீதும் புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இதனையடுத்து மேலதிக கடற்படையினர் அப்பகுதிக்கு விரைந்து அனுப்பப்பட்டனர். விமானப் படையின் உதவியும் அவசரமாகக் கோரப்பட்டது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்தத் தாக்குதல் நேற்று பிற்பகல் வரை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### லண்டனில் ஈழத்தமிழர் படுகாயம்

லண்டன்,செப்.17

லண்டனில் பயணமுகவர் நிறுவனம் ஒன்றை நடத்திவந்த சங்கர் என்ற ஈழத் தமிழ் இளைஞர் நேற்று இனந்தெரியாதோரால் கத்தியால் வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

பயண ஏற்பாடு தொடர்பான தகராறு காரணமாகவே இவர் தாக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(ஐ-164)

### எழுச்சி மாநாடு

சென்னை,செப்.17

தமிழ்நாடு சிதம்பரத்தில் நேற்றிரவு ஈழத்தமிழர் எழுச்சி மாநாடு நடைபெற்றது.

பழ.நெடுமாறனின் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

(ஐ-9)

## 783 பயணிகளுடன் 'லங்கா முதித்த' நேற்றிரவு காங்கேசன்துறை வந்தது!

### இங்கிருந்து நாளையே பயணிகளை ஏற்றிச் செல்லும்

யாழ்ப்பாணம்,செப்.17

திருகோணமலையில் இருந்து 783 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் மாலை புறப்பட்ட 'லங்கா முதித்த' கப்பல் நேற்றிரவு 7 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் இருந்து இன்று காலை பயணிகள் இறக்கப்படுவர் என்றும் -

நண்பகலுக்குள் அவர்கள் வீடுகளுக்குச் செல்ல வசதி செய்யப்படும் என்றும் -

ஈ.பி.டி.பி.வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் இன்று பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுப் பெற்றவர்களை நாளை காலை பயண ஏற்பாடுகளுடன் மணியம் கட்டடத்தில் உள்ள 'றான்' அலுவலகத்துக்கு வரும்படியும் ஈ.பி.டி.பி. கேட்டுள்ளது.

பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதலை அடுத்து வடக்கே வந்து கொண்டிருந்த 'லங்கா முதித்த' கப்பல் சர்வதேசக் கடல் பகுதிக்குச் சென்று அங்கிருந்து காங்கேசன்துறை துறை

(14 ஆம் பக்கம் பார்க்க)

### உறவினர்கள் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், செப்.17

திருகோணமலையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த 'லங்கா முதித்த' கப்பல் நேற்று காங்கேசன்துறைக்கு வரவிருந்த சமயத்தில்-

வடக்கு கடற்பரப்பில் கப்பல் ஒன்று தாக்கப்பட்ட செய்தி நேற்று நண்பகல் வாக்கில் குடாநாட்டில் பரவத் தொடங்கியதால் -

'லங்கா முதித்த' கப்பலில் தங்கள் உறவினர்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தோர் பெரும் பரிதவிப்புக்கு உள்ளாகினர்.

பயணிகள் கப்பலுக்கு என்ன

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திஸநாயக்கா தலைமையில் விரைவில் புதிய கட்சி?

### பீரிஸ், மஹிந்த இருவரும் அதில் இணைவர்

கொழும்பு,செப்.17

அண்மையில் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்த முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான எஸ்.பி.திஸநாயக்கா புதிய அரசியல் கட்சி ஒன்றை ஸ்தாபிக்கத் தயாராகி வருவதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்திருக்கிறது.

திஸநாயக்கா தலைமையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் அதிருப்திக் குழுவாகச் செயற்பட்டு வந்த முன்னாள் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மஹிந்த விஜேசேகர ஆகியோரும் இந்தப் புதிய கட்சியில் இணைந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதியமைச்சர் பதவிகளை இழந்துள்ள முன்னாள் பிரதியமைச்சர்கள் சிலருடன் அரசு மீது அதிருப்தி கொண்டுள்ள (14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் எண்ணிக்கை: இருபது இருபதுதான் என்கிறார் வீரவன்ஸ

கொழும்பு, செப்.17



அமைச்சரவையில் இருபது பேர் மட்டுமே இருக்க வேண்டும் என்ற உடன்பாட்டில் மாற்றம் எதுவும் கிடையாது. இருபது என்றால் இருபது தான்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பியுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைப்பதற்கு அரசு இணங்கி இருந்தது.

இந்நிலையில் பிரதமர் உட்பட 19 அமைச்சர்கள் கடந்த வெள்ளியன்று பதவியேற்றனர். பின்னர் கலாசார விவகார மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சராக விஜேபால மெண்டிஸ் நியமிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த (14 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலைக் கடலில் 'டோறா' மீது தாக்குதல்!

### கடற்கரும்புலிகள் இருவர் உயிரிழப்பு

கொழும்பு,செப்.17

திருகோணமலைக் கடலில் துறைமுக வாயிலுக்குச் சமீபமாக பவுல் முனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11.50 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையின் 'டோறா'ப் படகு மீது விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் கடற்படை மாலுமி ஒருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்றில் குழந்தை ஒன்றையும், 50 வயதான சிவிலியன் ஒருவரையும் ஏற்றிவந்த புலிகள் அவர்களைக் கவசமாகப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த மீன்பிடிப் படகு 'டோறா'ப் படகை நெருங்கிவந்து தாக்குதல்

(14 ஆம் பக்கம் பார்க்க)


பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கும் தினம் (22.09.2001) சனிக்கிழமை

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

PolioPlus Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இந்தியாவுக்கு இடித்துரைப்போம்!

ஈழத் தமிழ் மக்களின் இன்றியமையாத உரிமைகள் - இம்மியளவும் விட்டுக்கொடுக்க முடியாத - விட்டுக் கொடுக்க விரும்பாத உரிமைகள் எவை என்பதையும் -

எதிர்காலத்தில் எந்த ஒரு சக்தியாலும் தடுக்கப்படவோ - மறுக்கப் படவோ - பறிக்கப்படவோ முடியாமல் அவை எவ்வாறு வழங்கப்படவும் உறுதிப்படுத்தப்படவும் வேண்டும் என்பதையும் -

யார் விபரித்தும் விளக்கியும் வலியுறுத்தியும் ஆயுதப் போராட்டம் மூலம் வற்புறுத்தியும் வந்தவர்களோ -

அவர்களின் அபிலாஷைகளுக்கும் நியாயமான எதிர்பார்ப்புக்களுக்கும் போதிய முக்கியத்துவம் கொடுக்காமல், -

அற்ப சொற்ப உரிமைகளும் சலுகைகளும் வந்தாலே போதும், ஆயு தங்களை ஒப்படைத்துவிட்டு ஏதாவது பதவியைப் பெற்றுக்கொண்டு சொகுசாக வாழலாம் என யார் யார் விரும்பினார்களோ அவர்களைத் தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டு -

"எவ்வளவு குறைந்த உரிமைகளைக் கொடுக்கலாமோ அவற்றை மட்டும் கொடுப்பதாக இப்போதைக்குக் கூறுவோம்; சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றபடி அவற்றைக் கொடுக்கலாம் அல்லது கொடுக்காமல் விடலாம்" என்ற மனப்பான்மையுடன் யார் காலம் காலமாகத் தம் அரசியலை நடத்தி வந்தார்களோ -

அத்தகையவர்களுடன் - தேசியம், நாட்டுப் பற்று, ஒருமைப்பாடு, பரந்த மனப்பான்மை போன்ற "நயத்தக்க" நாகரிகச் சொற்களால் தம் பேரினவாதச் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் மூடி மறைப்பதை வழக்கமாக்கிக் கொண்ட இலங்கையின் ஆட்சியாளர்களுடன் -

1987 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி செய்து கொண்ட ஒப்பந்தமே ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந் தம் எனப்படும் இலங்கை இந்திய ஒப்பந்தம்!

விடுதலைப் புலிகளால் - நிர்ப்பந்தம் காரணமாக, வேறு வழியின்றி அரைகுறை மனத்துடனும் - ஏனைய தமிழ் இயக்கங்கள், கட்சிகளால் முழு மனத்துடனும் "வரவேற்கப்பட்ட" அந்த ஒப்பந்தம் -

தமிழர் நலனைப் புறந்தள்ளி, இந்தியாவின் "தன்" நலனையே முன்னிறுத்தி ராஜீவ் காந்தி செய்து கொண்ட அந்த ஒப்பந்தம் -

தவழத் தொடங்க முன்னரே விழுந்து படுத்துவிட்டது!

தமிழர்களைக் "காப்பாற்ற" வந்த இந்தியா, தன்னையே "காப்பாற்ற" முடியாமற் போனதும் - அதனால் ஏற்பட்ட அவமானத்தாலும் ஆத்திரத்தாலும் இலங்கைத் தமிழர் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் - இனிமேல், இலங்கை விஷயத்தில் நாங்கள் தலையிடவே மாட்டோம் - என இந்தியத் தலைவர்கள் பலர் சூளுரைத்ததும் -

வெறியும் வேகமும் வெறுப்பும் விரக்தியும் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிய சூழ்நிலையில் -

விடுதலைப் புலிகளின் ஆற்றலையும் அபிலாஷைகளையும் சரியாக மதிப்பிட நாங்கள் தவறித்தான் விட்டோம் -

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க எங்களால் முடியாமற் போய்விட்டது என்பது உண்மைதான் -

திலீபனின் உயிரைக் காப்பாற்ற நாங்கள் முயற்சி எடுத்திருந்தால், பின்னர் நடைபெற்ற எத்தனையோ பயங்கரங்களை எம்மால் தவிர்க்க முடிந்திருக்கும் -

என யாழ்ப்பாணத்தில் இந்தியப் படைத் தளபதியாக இருந்த ஜெனரல் கல்கத் -

பிரதமர் ராஜீவைத் தவறாக வழி நடத்தியதாகக் கருதப்பட்ட - அக்காலகட்டத்தில் இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றிய - ஜே.என்.டிக்ஷித் -

உள்ளிட்ட பல உயரதிகாரிகள் ஒப்புக்கொண்டதும் நாமறிந்தவையே!

இலங்கை விடயம் குறித்து மீண்டும் தீவிர கவனம் செலுத்துவதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள முடிவை -

மேற்சொன்ன பின்னணியிலேதான் நாம் நோக்க வேண்டும்!

அதேவேளையில் -

புலிகளை இலங்கை இராணுவம் கட்டுப்படுத்தும் என்பது தொடர்பாக இந்தியாவுக்கு ஏற்பட்டுவரும் நம்பிக்கையீனம் -

புலிகளின் அபரிமித இராணுவ - அரசியல் வளர்ச்சியால் இந்தியாவின் உள்ளேயும் தென்கிழக்கு ஆசியாவிலும் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் -

போன்றவையும் இந்தியாவின் இம்முடிவுக்குக் காரணங்கள் எனக் கூறப்பட்டுள்ளதையும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் -

இந்தச் சூழ்நிலையில் -

தமிழ்க் கட்சிகள் செய்யவேண்டிய - தவிர்க்க முடியாத கடமை ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் -

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நீதியான - நியாயமான - இறுதி யான - உறுதியான தீர்வைக் காணவேண்டும் என்றால் இலங்கை அரசு, எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் -

எனக் கடந்த சில ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வரும் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் -

ஒரே தலைமையின் கீழ் அணிதிரண்டு -

இதே கருத்தை இந்தியாவிடமும் சொல்ல வேண்டும் -

அழுத்தம் திருத்தமாக - ஐயம் திரிபிற்கிட மின்றிச் சொல்ல வேண்டும் -

"தனித்தனியே" சென்று சந்திக்கின்ற தவறைத் தொடர்ந்தும் செய்து கொண்டிராமல் -

தமிழ்மக்களின் உரிமைகளைப் பொறுத்த வரையில் - தமிழ்க் கட்சிகளும் தமிழீழ விடு தலைப் புலிகளும் ஒத்த கருத்துடையவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் -

ஒரே அணியில் நின்று - ஒரே குரலிலே முழங்க வேண்டும் -

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டமையும் -

காலத்துக்குக் காலம் தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டமையும் -

இலங்கையிலே தமிழர்களாகப் பிறந்த ஒரே ஒரு காரணத்தால் -

அவர்கள் ஷெல்லடிக்கும், சித்திரவதைக்கும், சிறை வாழ்க்கைக்கும், அகால மரணத்துக்கும், சொல்ல முடியாத வேறும் பல அட்டூழியங்களுக் கும் ஆளாகி வருகின்றமையும் தாம் -

விடுதலைப் புலிகளின் அபரிமித வளர்ச்சிக்கும் அளப்பரிய ஆற்றலுக் கும் அடிப்படை என்பதைத் தெளிவாக விளக்கி -

அவர்களுக்கு எதிராகப் போர் தொடுத்து, அவர்களை மேலும் வளர்ச் சியடையச் செய்யாமல் -

அவர்கள் கேட்கின்ற - தமிழ் மக்கள் அனைவரும் கேட்கின்ற - நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதே அவர்களை "வலு" விழக்கச் செய்கின்ற புத்திசாலித்தனமான செயற்பாடு -

என்பதையும் "உறைப்பாக" விளக்க வேண்டும்!

பணத்தையும் பதவியையும் கொடுத்து, தமிழர்களை விலைக்கு வாங்கலாம் என்ற அரசின் சூழ்ச்சிக்கு உடந்தையான - ஒருவரும் -

இந்திய அரசால் பல ஆண்டுகள் "பங்குவமாகப்" பராமரிக்கப்பட்டு -

சிங்களத் தலைவர்கள் எதைக் கொடுக்க முன்வருகின்றார்களோ அதை வாங்குவதே புத்திசாலித்தனம் என இப்போது உபதேசம் செய்து வரும் ஒருவரும் -

"அந்தப் பக்கத்தில்தான் இருக்கின்றார்கள் என்பதை நன்றாக நினைவில் இருத்திச் சரியாகச் செயற்படுமாறு தமிழ்த் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

- சித்தன் -

## பருத்தித்துறை துறைமுகம் வெறிச்சோடியது

வடமராட்சி, செப்.17

பருத்தித்துறைத் துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் நேற்று ஸ்தம்பித்திருந்தன.

காங்கேசன்துறையில் இருந்து கப்பல்கள் எவையும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வரவில்லை. இதன் காரணமாக துறைமுகப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

பொருள்களை ஏற்றிவருவதற்காக துறைமுகப்பகுதிக்குச் சென்ற லொறிகளும் திருப்பி அனுப்பப்பட்டன. (ஐ-173-117-31-3)

## தீயில் எரிந்து இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெயை ஊற்றித் தீமூட்டி எரிந்து மரணமானார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மு.அருளானந்தம் (வயது 35) என்பவரே மரணமானவராவார். இது தொடர்பான மரணவிசாரணை நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது. பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-4-ரி)

## மன்னார் புங்குடுதீவு படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாய விளைபொருள்களுக்குச் சந்தை வாய்ப்பைப் பெருக்கும் வகையில் புங்குடுதீவுக்கும் தலை மன்னாருக்கும் இடையில் படகுப் போக்குவரத்துச் சேவை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

இப்படகுச் சேவையை பயணிகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவது தொடர்பாக யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்ட ஆயர்களுக்கு ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் -

புங்குடுதீவுக்கும் தலை மன்னாருக்குமிடையிலான படகுப் போக்குவரத்து சேவை இடம்பெறுமாயின் உள்ளூர் விவசாய விளை பொருள்களுக்கான சந்தை வாய்ப்பு பெருகுவதுடன் மன்னார் மற்றும் யாழ்ப்பாண பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள் துரிதமடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் -

ஈ.பி.டி.பி. அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3)

## உயிரிழப்பு

வவுனியா, விளாத்திக்குளம் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் காவல்துறையின் சிறப்புப்படையணியைச் சேர்ந்த இராமன் அல்லது சுதா (தம்பிராசா இராமன் - கண்டி) என்பவர் மரணமானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

# பின்லேடனை ஒப்படைக்க மூன்று நாள்கள் அவகாசம்!

## அமெரிக்கா விதித்தது

நியுயோர்க்,செப்.17

சர்ச்சைக்குரிய இஸ்லாமியத் தீவிரவாதத் தலைவர் ஒஸாமா பின்லேடனை தம்மிடம் ஒப்படைப்பதற்கு மூன்று நாள்கள் அவகாசத்தை தலிபான்களுக்கு அமெரிக்கா வழங்கி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தக் கால அவகாசத்துக்குள் பின்லேடனை ஒப்படைக்கத் தவறினால ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் அமெரிக்கா எச்சரித்திருக்கிறது.

கடந்த செவ்வாயன்று அமெரிக்க நகரங்கள் மீது பெருத்த எடுப்பில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களுக்கு தீவிரவாதி ஒஸாமா பின்லேடனே பொறுப்பு என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி இருக்கிறது. ஆனால் அதற்கான போதிய ஆதாரங்களைத் தந்தால் மட்டுமே லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைப்போம் என்று தலிபான் ஆட்சியாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆப்கான் மண் மீதான எந்தத் தாக்குதலும் அதன் புனிதத் தன்மை மீதான அத்துமீறல் எனக் கருதப்பட்டு தகுந்த பதிலடி திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் -

அமெரிக்காவின் தாக்குதலுக்கு உதவும் அண்டை நாடுகள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் எனவும் - தலிபான் எச்சரித்திருக்கிறது.

இதேவேளை -

அமெரிக்கா நடத்த இருக்கும் தாக்குதலால் பீதியடைந்திருக்கும் ஆப்கானிஸ்தான் பொதுமக்கள் கையில் அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு பாகிஸ்தானுக்குள் நுழைவதற்காக பாக் - ஆப்கன் எல்லையை நோக்கிப் படை எடுத்து வருவதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-9)



## பாக். அரச தூதுக்குழு இன்று காபூல் விரைகின்றது

பின்லேடனை ஒப்படைக்குமாறு அமெரிக்கா கோரிவரும் நிலையில் பாகிஸ்தானில் இருந்து உயர் மட்ட அரச தூதுக் குழு ஒன்று இன்று ஆப்கானிஸ்தானுக்குச் செல்கிறது.

பின்லேடனை ஒப்படைக்க தலிபான்களை வழிக்குக் கொண்டு வருமாறு பாகிஸ்தான் மீது அதிகரித்து வரும் அழுத்தங்களை அடுத்து அதிபர் முஷாரப் இந்தக் குழுவை காபூலுக்கு அனுப்புகின்றார்.

பின்லேடனை அமெரிக்காவிடம் கையளித்துவிடுமாறு இக்குழுவினர் தலிபான் ஆட்சியாளரிடம் நேரில் கேட்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க இராணுவ நடவடிக்கையைத் தவிர்ப்பதற்கான இறுதி முயற்சி இது என்றும் கருதப்படுகிறது. (ஐ-9)

## முஷாரப் சீனா செல்வார்

இஸ்லாமாபாத்,செப்.17

ஒஸாமா பின்லேடன் விவகாரத்தால் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துவரும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக அந்நாடுகளுக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

ஓரிரு தினங்களில் அவர் சீனாவுக்கும் செல்வார் என்று பி.பி.ஸி. தெரிவித்தது. (ஐ)

## புதுடில்லியில் பாதுகாப்புத் தீவிரம்

புதுடில்லி,செப்.17

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடியாக இந்தியா மீதும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுக்கலாம் என எதிர்பார்த்து தலைநகர் புதுடில்லியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

விரிவான ஒரு பாதுகாப்புத் திட்டத்தின்படி புதுடில்லியில் கேந்திர நிலையங்களின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டவர்களும் உள்ளூர் பயணிகளும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா ஆரம்பித்திருக்கும் போருக்கு இந்தியா தனது முழு ஆதரவை அளிக்க முன்வந்திருப்பதை அடுத்து காஷ்மீர் தீவிர வாதிகள் உட்பட இஸ்லாமியத் தீவிரவாதிகளின் இலக்காக இந்தியா மாறியிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ-9)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி பரமேஸ்வரன் வாஞ்சனா

இல. 594/2, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த பரமேஸ்வரன் - ஜீவராணி தம்பதிகளின் செல்வப்புதல்வி வாஞ்சனா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (17.09.2001) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா அம்மப்பா, அம்மம்மா, ஆச்சி, மாமாமார், சித்திமார், சித்தப்பாமார், அத்தைமார், அம்மம்மாமார், அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மச்சான்மார், அண்ணாமார், அக்காமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

யாழ்ப்பாணம்.

பா.கண்ணன் (தகப்பன்),
அர்ச்சுனா நகையகம்.

(92382)

## நியூயோர்க் நகர இரட்டைக் கட்டடங்களின்
# இடிபாட்டுக்குள் 12 தொன் தங்கம்; அபகரிக்க சமூகவிரோதிகள் திட்டம்!

நியூயோர்க்,செப்.17

அமெரிக்காவில் விமானத் தற்கொலைத் தாக்குதலால் தரைமட்டமாகிய உலக வர்த்தக மையக் கட்டட இடிபாடுகளுக்குள் புதையுண்டிருப்பதாகக் கூறப்படும் தங்கப்பாளங்களை அபகரிக்கச் சமூக விரோதக் கும்பல்கள் அப்பகுதியை வட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. இதனால் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதில் - இந்தக் கும்பல்களின் தலையீடுகளால் மீட்புப்பணியாளர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

உலக வர்த்தக மையக் கட்டடத்தின் ஒரு மாடியில் 'நியூயோர்க் மெர்கன்டைல் எக்ஸ்சேஞ்ச்' என்ற நிறுவனம் இயங்கியதாகவும் -


அதற்குச் சொந்தமான சுமார் 12 தொன்கள் எடையுள்ள தங்கப்பாளங்கள், இரட்டைக் கட்டடங்களின் கீழ் பாதாளப் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் -

தற்போது 110 மாடிகளைக் கொண்ட இரட்டைக் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகி, தங்கப்பாளங்கள் உள்ள பாதாள அறையின் மீது மலைபோல் குவிந்துள்ளதாகவும் - கூறப்படுகிறது.

இதேசமயம், ஆயிரக்கணக்கானவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள நிலையில், அவர்களில் உயிர் தப்பியுள்ளோரை மீட்பதற்காக, பொறுமையுடனும், அவதானமாகவும் இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

ஆனால் தங்கப்பாளங்களை அபகரிக்கத் துடிக்கும் சமூகவிரோதக் கும்பல்கள், இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களின் உறவினர் போலவும் அழிந்த கட்டடத்தில் இயங்கிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் போலவும் நடித்து, இடிபாடுகளைத் தமது இஷ்டப்படி அகற்ற முயற்சிப்பதாக மீட்புப்பணி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு அறைகள் அமைத்துக் கொடுக்கும் "பிடலி டிரேடிங்" நிறுவனம் கருத்துக் கூறுகையில், ஏறத்தாழ 107 அடிகள் உயரமுடைய மாடிக் கட்டடத்தின் இடிபாடுகள் தங்கப்பாளங்களின் மீது குவிந்து கிடப்பதால் கொள்ளையர்களோ, வெளி ஆள்களோ அவற்றை நெருங்க முடியாதென்று தெரிவித்துள்ளது. (ஒ-7)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த வாரம் நிகழ்ந்த விமானத் தற்கொலைத் தாக்குதலில் தகர்ந்து விழுந்த இரட்டைக் கோபுரங்களின் எஞ்சிய பகுதியைப் படத்தில் காணலாம். இது தாக்குதலின் நினைவுச் சின்னமாக அமெரிக்க அரசால் பராமரிக்கப்படக்கூடும்.

(உள்படம்: 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி உலகின் முதலாவது அனுகுண்டை அமெரிக்கா வீசிய ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நினைவுச் சின்னமாக உள்ள சேதமடைந்த கட்டடம்)

# அமெரிக்காவுக்கு உதவினால் பாகிஸ்தான் மீதும் தாக்குதல்
## தலிபான்கள் எச்சரிக்கை

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலடியாக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள பாகிஸ்தான் உதவினால், அதன் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

அத்தகைய ஒத்துழைப்பு இஸ்லாத்துக்கு எதிரான போர்ச் செயலாக கருதப்படும் என்று இஸ்லாமிய மக்கள் படை எனப்படும் தலிபான் ஆதரவு அமைப்பு தெரிவித்தது.

அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல் நடக்கும் சமயத்தில், காபூலில் உள்ள வெளிநாட்டவர் உளவாளிகளாகச் செயற்படும் சாத்தியம் இருப்பதால், அவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு தலிபான்கள் வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, ஆப்கான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ள போஹ்ஹாமில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான ஆப்கானிஸ்தானியர்கள் குவிந்திருப்பதாகவும் -

அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் புகலிடம் தேடி பாகிஸ்தானுக்குள் நுழையவே அவர்கள் காத்திருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### ஆப்கான் எல்லையை ஈரான் மூடியது

தெஹ்ரான்,செப்.17

ஆப்கானிஸ்தானுடனான தனது எல்லை வழிகளை மூடிவிட்டதாக ஈரான் அறிவித்துள்ளது.

தலிபான்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அதிக எண்ணிக்கையில் ஆப்கானிஸ்தானிலிருந்து அகதிகள் ஈரானுக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

### அமெரிக்காவில் கைதானோர் விடுதலை

நியூயோர்க்,செப்.17

விமானத் தற்கொலைத் தாக்குதலையடுத்து, நியூயோர்க் கென்னடி விமான நிலையத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிததனர்.

நியூயோர்க் விமான நிலையம் தாக்குதலின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்ட போது பயணம் மேற்கொள்ள விருந்த 10பேர் கைதானது தெரிந்தது.

### இந்திய கம்யூனிஸ்ட் கடும் எதிர்ப்பு

புதுடில்லி,செப்.17

இந்தியாவில் அமெரிக்க இராணுவத்துக்குத் தளவசதிகள் வழங்கப்படுவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும் - ஆனால் அதற்காக அமெரிக்காவுக்கு இந்தியாவில் தளவசதிகளைத் தருவதை ஏற்கமுடியாது என்றும் - அக்கட்சி கூறியுள்ளது.

# தனது மறைவிடத்தை விட்டு இடம்பெயர்ந்தார் பின்லேடன்

லண்டன்,செப்.17

சவூதி அரேபியக் கோடீஸ்வரரும், இஸ்லாமியத் தீவிரவாதியுமான ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் தனது மறைவிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்குச் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது. அவரது குடும்பத்தினருடனும், ஆதர வாளர்களுடனும் அவர் இடம்பெயர்ந்ததை நேரில் கண்டவர்கள் தெரிவித்ததாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானிய நகரான கண்டகரில் சுமார் 2ஆயிரத்து அறுநூறு ஆயுதம் ஏந்திய ஆதரவாளர்கள் மத்தியில் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் தங்கியிருந்ததாகவும் -

பின்லேடனின் மறைவிடத்தின் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டு வருவதையடுத்து அவர் நேற்று முன்தினம் இரவு இருளின் துணையுடன் இடம்பெயர்ந்து பனுஸ்தான் என்ற இடம் நோக்கிச் சென்றுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்,விமானத் தாக்குதல் நடத்துவதன் மூலம் பின்லேடனுக்கு பொருள் சேதத்தை ஏற்படுத்த முடியுமேதவிர அவரைப் பிடிக்கவோ அல்லது கொல்லவோ முடியாது என்பதை அமெரிக்கா உணர்ந்திருப்பதாகவும்-

அதனாலேயே தரைவழித் தாக்குதல்களை நடத்துவதில் அமெரிக்கா முக்கிய கவனம் செலுத்துவதாகவும் -

அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (ஒ)

### தலிபான் எதிர்ப்புக் குழுத் தலைவர் சிகிச்சை பலனின்றி இறந்தார்!
#### தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான

காபூல்,செப்.17

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் இயக்கத்துக்கு எதிராகப் போராடிவரும் தலிபான் எதிர்ப்புக் குழுவின் தலைவர் அகமட் ஷா மசூட் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 9ஆம் திகதி, அராபிய பத்திரிகையாளர்கள் போல் வந்து, மசூட்டைச் சந்தித்த இருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்த மசூட், பலத்த காவலின் மத்தியில் வோஜா பஹாடீனில் உள்ள அவரது இல்லத்தில் சிகிச்சை பெற்றுவந்தார்.

இந்த நிலையில்,

தலிபான் எதிர்ப்புக் குழுவின் சிரேஷ்ட தலைவர் புர்கானுதீன் ரபானி அவசரமாக வடஆப்கானிஸ்தான் சென்றுள்ளதாகவும் -

அகமட் ஷா மசூட்டின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவே ரபானி சென்றதாகவும் - தலிபான் எதிர்ப்புக் குழுவின் பேச்சாளர் பாகிஸ்தானியச் செய்தியாளரிடம் தெரிவித்தார். இதனையடுத்தே மசூட் இறந்தது தெரிய வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் 95 சதவீத நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள ஆளும் தலிபான் அமைப்பை எதிர்க்கும் எதிர்த்தரப்பினரின் போராட்டத்துக்கு மசூட்டின் மறைவு பின்னடைவாகும் என்று கருதப்படுகிறது. (ஒ-4)

#### தமது மக்கள் நிம்மதியாக வாழ
# இனியாவது அமெரிக்க ஆட்சியாளர் நல்லறிவைப் பயன்படுத்த வேண்டும்
## அதிபர் சதாம் ஹுசைன் அறிவுரை

பாக்தாத்,செப்.17

அமெரிக்க மக்கள் நிம்மதியாக வாழ, இனியாவது அமெரிக்க ஆட்சியாளர்கள் தமது நல்லறிவைப் பயன்படுத்தவேண்டும். இவ்வாறு, ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அமெரிக்காவுக்கு அறிவுரை கூறியுள்ளார்.



ஈராக்கிய ஊடகங்கள் மூலம் அதிபர் சதாம் வெளியிட்ட பகிரங்கக் கடிதத்திலேயே இந்த அறிவுரை குறிப்பிடப்பட்டுள்ளது.

நியூயோர்க் மற்றும் வாஷிங்ரன் தாக்குதல்களையடுத்து, அவற்றுக்குக் காரணமானவர்கள் மீது போர் ஒன்றைத் தொடுக்கப்போவதாக அறிவித்துள்ள அமெரிக்காவும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ள மேற்கு நாடுகளும் வன்முறை நாட்டத்தைக் கைவிட்டு, விவேகத்தைப் பயன்படுத்தவேண்டும் என்றும் அதிபர் சதாம் கோரியுள்ளார்.

மிகத் தீவிரமாகவும், கட்டுப்பாடின்றியும் வன்முறைப் பயங்கரவாதங்களைக் கையாண்ட அமெரிக்கா, அவற்றால் தனது எண்ணங்கள் நிறைவேறாதென்பதை இப்போது உணர்ந்து, ஏமாற்ற மடைந்து சலிப்புற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையிலாவது ஒரு தடவையேனும் அமெரிக்க அரசு நல்லறிவைப் பயன்படுத்தினால், அமெரிக்க மக்கள் நிம்மதி மூச்சு விடமுடியும் என்றார் அதிபர் சதாம். (ஒ)

# பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த இந்திய அரசு பகீரதப்பிரயத்தனம்
## இஸ்லாமியத் தலைவர்கள் குற்றச்சாட்டு

அமெரிக்காவில் நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலை மையமாக வைத்து பாகிஸ்தானைத் தனிமைப்படுத்தும் முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு பாகிஸ்தானிய இஸ்லாமிய மதத் தலைவர்கள் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பை எச்சரித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பாகிஸ்தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் உயர் குழு, தேசிய பாதுகாப்புக் குழு மற்றும் அமைச்சரவை ஆகியவற்றைக் கூட்டி அதிபர் முஷாரப் ஆராய்ந்து வரும் வேளையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்க்கும் நடவடிக்கை என்ற போர்வையில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தானை உதவவைத்து, அதன் மூலம் இஸ்லாமிய உலகத்திலிருந்து பாகிஸ்தானைத் தனிமைப்படுத்தவே அமெரிக்காவில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு இந்தியா அளவுக்கதிகமாக துயரப்படுவதாகக் காட்டிக்கொள்கிறது.

அதேசமயம், ஆப்கானிஸ்தானைத் தாக்க அமெரிக்காவுக்கு உதவாவிட்டால், தீவரவாதத்தை ஆதரிக்கும் நாடு என்ற முத்திரையைக் குத்தி சர்வதேச சமூகத்தில் இருந்து தனிமைப் படுத்தவும் இந்தியா சதி செய்கிறது.

இவ்வாறு இஸ்லாமியத் தலைவர்கள் அதிபரிடம் சுட்டிக்காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது எல்லைக்கப்பால் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையில் பற்கேற்கப்போவதில்லை என்று பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல் சதார் கூறியுள்ள நிலையில் -

அமெரிக்காவுக்கு உதவுவது குறித்து பாகிஸ்தான் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் விடுக்காதநிலையில் -

இந்தியா தனது சார்பு ஊடகங்கள் மூலம் பாகிஸ்தானுக்கு பாதகமான செய்திகளை திட்டமிட்டுக் கசிய விடுவதாகவும் இஸ்லாமியத் தலைவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் அமெரிக்காவின் படை நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கக்கூடாது என வலியுறுத்தி தலைநகர் இஸ்லாமாபாத்தில் இஸ்லாமிய மதத் தலைவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதேவேளை பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் - காஷ்மீர் மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றாமல் காஷ்மீர் போராட்டத்தை நசுக்க அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலை துருப்புச் சீட்டாக இந்தியா பயன்படுத்துவதாக காஷ்மீர் தீவிரவாத அமைப்பு ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதலுக்கு உதவுவதற்கு இந்திய முஸ்லிம்கள் கசப்படையாமல் இருக்கவே 'பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை' என்ற பிரசாரத்தை 'தூர்தர்ஷன்' உட்பட இந்திய அரசின் ஊடகங்கள் முடுக்கிவிட்டிருப்பதாகவும் -

பாகிஸ்தனை தனிமைப்படுத்தி, காஷ்மீர் பிரச்சினையில் தனக்குச் சாதகமான நிலையை உருவாக்க, இதைவிட்டால் வேறு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று இந்தியா நம்புவதாகவும் அரசியல் அவதானிகள் நம்புகின்றனர். (ஒ)

## நினைவுநாள் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 17

'கோப்பாய் கோமகன்' என அழைக்கப்படுபவரும் தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கு. வன்னியசிங்கத்தின் நினைவுதின நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் நடைபெறும். (ஐ)

## முன்பள்ளி ஆசிரியருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி, செப். 17

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் இதுவரை ஊக்குவிப்பு கொடுப்பனவைப் பெறாதிருப்பின் வடமராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை. சத்தியசீலனுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க-117)

## வியாபாரிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 17

வடமராட்சி வல்லிபுர ஆலய சுற்றாடலில் சுகாதாரமற்ற முறையில் இனிப்புப் பொருள்கள் விற்பனை செய்த வியாபாரி மீது இப்பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகரால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் உணவுப் பொருள்களை சுகாதாரமற்ற முறையில் வைத்திருந்தமைக்காக வியாபாரியை எச்சரித்ததுடன் 500 ரூபா குற்றப் பணமாகவும், 250 ரூபாவை வதிரி பரமானந்தா ஆச்சிரமத்திற்குச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

(க-117)

## விவசாயபீட மாணவருக்கான விரிவுரைகள்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு அனுமதி பெற்ற புதிய மாணவர்களுக்கான முதலாம் அரை ஆண்டுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முன்னதாக முதலாம் திகதி புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நடைபெறும் என்றும் — விவசாய பீடத்திற்கு பதிவினை மேற்கொண்ட புதிய மாணவர்களை அந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## விவசாயக் கடனுதவி

சண்டிலிப்பாய், செப். 17

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் காலபோக நெல் விதைப்பில் ஈடுபடவிருக்கும் சங்க உறுப்பினர்களுக்கு நெற் செய்கைக்கான கடன் வழங்குவதென்று தீர்மானித்துள்ளது

விவசாயிகளுக்கு, தலா ஆறாயிரம் ரூபா வரை கடனுதவி வழங்கப்படும் என்றும் —

இக்கடனுதவியைப் பெற விரும்பும் விவசாயிகள் தத்தமது கிளைகள் ஊடாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் —

சங்கப் பொது முகாமையாளர் சு. வைரவநாதன் தெரிவித்தார். (ம-135)

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசு சூழ்ச்சித் திட்டம்!

## ஜே. வி. பி. குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, செப். 17

ஐந்து சுதந்திர ஆணைக் குழுக்களை அமைக்கும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை நீதிமன்றம் மூலம் வழங்குவதற்கான சூழ்ச்சிகள் அரச தரப்பில் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான செயல்களில் அரசு ஈடுபடுமானால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் முறிவுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

ஜே. வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆணைக் குழுக்களை அமைப்பதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதில் மேலும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் கோருவது உரிமையில்லாத ஒரு விடயமே.

17 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களில் சில மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியவை, பல விடயங்கள் மக்களுக்கு பாதகமானவை. எவ்வாறாயினும் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடியவை என்றால் நாம் அதற்கு ஆதரவு அளிப்போம்.

இவ்விடயத்தில் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் கயிறு இழுப்பில் ஈடுபட்டால் இறுதியில் எதிர்க்கட்சிகள் சேர்ந்து மேற்கொண்ட திருத்தச் சட்ட மூலப் பிரேரணையை எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நாம் சமர்ப்பிப்போம்.

நாட்டினதும் மக்களினதும் நன்மை கருதியே புரிந்துணர்வு உடன்படிக்கையை [illegible]கொண்டோம்.

அது முறிந்து விடாது [illegible]காக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்— என்றார். (ஐ-3)

## புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச வேண்டும்

கொழும்பு, செப். 17

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச்சுக்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அரசிடம் கோரும் தீர்மானம் ஒன்றை முஸ்லிம் கல்வி, சமூக ஆய்வுகள் நிறுவனத்தின் (மெஸ்ரோ) அம்பாறைப் பிராந்தியக் குழு நிறைவேற்றியிருக்கிறது

பொ. ஐ. முன்னணிக்கும் ஜே. வி. பிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளைத் தேட முயற்சிக்காமல்—

சமாதானத்துக்கான சமிக்ஞைகளைச் சாத்தியமற்றதாக்கும் வகையில் ஜே. வி. பியினர் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாகக் கடும்போக்கைக் கடைப்பிடிக்குமாறு அரசை அழுத்துவது —

நீண்டகாலமாக நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவற்ற ஒன்றாக மாற்றிவிடும் என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## தனியே வசித்த வயோதிப மாது கிணற்றில் சடலமாக மீட்பு!

### பருத்தித்துறைப் பகுதியில் சம்பவம்

நெல்லியடி, செப் 17

தனிமையில் வசித்துவந்த வயோதிப மாது ஒருவர் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து உருக்குலைந்த எலும்புக் கூடாக மீட்கப்பட்டிருக்கிறார்.

பருத்திததுறை ஐயனார் கலட்டியைச் சேர்ந்த கந்தையா கணேசநாயகி (வயது 83) என்பவரின் சடலமே மீட்கப்பட்டிருக்கிறது.

அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் அவரது சடலம் காணப்பட்டது. சமார் 10 தினங்களுக்கு முன்பிருந்து இவர் காணாமற் போயிருக்க வேண்டும் என்று உறவினர்கள் நம்புகின்றனர்,

தனித்து வாழ்ந்து வந்த அப்பெண்ணிடம் பெருமளவு பணம் மற்றும் நகைகள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இவரது படுக்கையில் தலையணையின் கீழே ஒரு லட்சம் ரூபாவுக்குரிய காசோலை ஒன்று மீட்கப்பட்டிருக்கிறது.

பணம் மற்றும் நகைகளை அபகரிக்கும் நோக்கில் இப்பெண் கொலை செய்யப்பட்டு சடலம் கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சடலம் தற்போது மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணை என்பன இன்று நடைபெறவிருக்கின்றன.

(ஐ-109-173)

## கணவரை இழந்த பெண்கள் ஓய்வூதியம் பெறக் காத்திருப்பு

### நீண்டகாலமாகியும் கிடைக்கவில்லை

யாழ். மாவட்டத்தில் கணவனை இழந்த விதவைகள் பலரும் தமது ஓய்வூதியத்தைப் பெறமுடியாத நிலையில் மாதக் கணக்கில் காத்திருக்கின்றனர்.

விதவை ஓய்வூதியம் பெறுவதற்கு அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பித்தபோதிலும் கொழும்பில் உள்ள விதவை ஓய்வூதிய அலுவலகத்தினால் உரிய கோவைகள் அனுப்பிவைக்கப்படாததால் ஓய்வூதியம் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்து மாதக்கணக்கில் ஓய்வூதியம் கிடைக்காததால் பல குடும்பங்கள் வறுமையின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளன.

விதவை ஓய்வூதிய அலுவலகத்தில் இருந்து கோவை கிடைத்த பின்னரே இங்கு ஓய்வூதியம் வழங்க முடியும் என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பத்தாம் ஆண்டு நினைவை ஒட்டி நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு கொய்யாத் தோட்டம் மைதானத்தில் இடம்பெறும். இவ் ஆட்டத்தில் ஏசியன் விளையாட்டுக்கழகமும் யாழ். கொட்டடி சன சமூக நிலைய விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா 'ஏ' அணியும் யங்கம்பன்ஸ் 'ஏ' அணியும் மோதுகின்றன. (ஐ-3)

## குடத்தனை பாடசாலையில் சுகாதாரப் பரிசோதனை

தென்மராட்சி, செப். 17

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த வெள்ளியன்று பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினரால் சுகாதாரப் பரிசோதனை நடத்தப்பட்டது.

பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்வி கற்கும் 118 மாணவர்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு பூச்சி மருந்து வழங்கப்பட்டது. ஊட்டச் சத்து குளிசைகளும் வழங்கப்பட்டன.

குடத்தனை நடமாடும் வைத்திய சேவைப் பிரிவின் டாக்டர் எம். யோகேஸ்வரா தேவர் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நலசேவையாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் இப் பரிசோதனையில் கலந்து கொண்டனர்.

இப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து மாணவர்களுக்கான சுகாதாரப் பரிசோதனை நடத்தப்பட்டதாக அதிபர் கே. கே. யோகநாதன் தெரிவித்தார். (ஐ-117-118)

## சிறுவர் உரிமை கண்காணிப்பு குழுக் கூட்டம்

தென்மராட்சி செப். 17

சிறுவர் உரிமைகள் தொடர்பான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறும்.

(ஐ-117)

## பெறுபேறுகள்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இப் பரீட்சைப் பெறுபேறுகளை இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலைய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்று நிலையத்தின் இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (க-ரி)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 17

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வைத்தீஸ்வரநாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். 28 ஆம் திகதி பூங்காவனத் திருவிழா வைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-15)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 17

காரைநகரில் புகலி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இரவு சிறப்பு நிகழ்ச்சிகளாக 'வள்ளி திருமணம்' எனும் தலைப்பிலான கதாப் பிரசங்கமும் காரைநகர் திருநாவுக்கரசு நாடக சபாமன்றத்தின் 'அரிச்சந்திரா மயான காண்டம்' என்ற சரித்திர நாடகமும் இடம்பெறவுள்ளன. (க-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 17

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-4)

## கூட்டுறவுச் சங்க உறுப்பினருக்கு விசேட சலுகை

சண்டிலிப்பாய், செப். 17

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் சங்க அங்கத்தவர்களுக்குக் கடன் அடிப்படையில் பொருள்களை வழங்குவது என்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

சேமிப்புக் கணக்கு உள்ளவர்கள் தங்கள் பிரிவுக் கிளைகளில் இச் சலுகையைப் பயன்படுத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்று சங்கத் தலைவர் ம. சற்குணசிங்கம் தெரிவித்தார்

(க-135)

## கடூழியச் சிறை

வலி. வடக்கு, செப். 17

சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சுவதற்காக 50 போத்தல் கோடா வைத்திருந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இளவாலைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட பண்டத்தரிப்பு அம்மன் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சுரேஷ்குமார் என்பவருக்கே மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் இத் தண்டனையை வழங்கியுள்ளார். (க-86)

## வங்கியின் உற்சவகால கருமபீடம்

நெல்லியடி, செப். 17

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று ஆரம்பமாகும் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் உற்சவ கால விசேட கருமபீடம், இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அ. பிரேம்சங்கரினால் ஆரம்பித்து வைக்கப்படும். (ஐ-109-31)

உதயன்

## 'எய்ட்ஸ்' அரக்கனை எட்டத்தில் வைப்போம்!

உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை விரைந்து எடுக்கப்படாவிட்டால் யாழ்.குடாநாட்டில் 'எய்ட்ஸ்' நோய் வேகமாகப் பரவுவதைத் தடுக்க முடியாதுபோய்விடும் என்று உலக வங்கி எச்சரித்திருக்கின்றது.

குடாநாட்டின் மருத்துவத்துறை சார்ந்த அதிகாரிகளோடு பேச்சு நடத்திய பின்னர் உலக வங்கித் தூதுக் குழுவின் தலைவர் மரியானா ரொடோரோவா இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார்.

அகதி முகாம்களின் நிலைமை, பொதுவான வாழ்க்கைச் சூழல், பெண்களின் தலைமையை நம்பியிருக்கும் குடும்பங்கள் அதிகம் உள்ளமை போன்றவை 'எய்ட்ஸ்' பரவுவதற்கான வாய்ப்பை அதிகரித்திருப்பதாக அவர் கூறுகின்றார்.

ஒட்டுமொத்தத்தில் யுத்த சூழ்நிலையே இந்த ஆபத்து அதிகரித்திருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவும் அது உருவாக்கிய வறுமையும், குடும்பத் தலைவர்களின் இழப்பு அல்லது செயலாற்றமுடியாத தன்மையும் குடும்பங்களை - வேறு வழியின்றி - ஈனத் தொழிலின்பால் பலவந்தமாகத் தள்ளியுள்ளன என்பது யதார்த்தமாகும்.

யுத்த சூழ்நிலையும், அது ஏற்படுத்திய புதிய ரக நாகரிக முறைகளும் காலங்காலமாகத் தமிழர்கள் பேணி வந்த கலாசார விழுமியங்களை விழுங்கி, ஓர் ஒழுங்கற்ற - பண்பற்ற - வாழ்க்கை முறைக்கு சமுதாயத்தை இட்டுச் சென்று கொண்டிருப்பதே 'எய்ட்ஸ்' அரக்கன் நமது சமூகத்துக்குள்ளும் இலகுவாக ஊடுருவி, தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது உண்மையாகும்.

உலக வங்கியின் பொதுச் சுகாதார நிபுணர் சலீம் ஹபயப், ஆயுதப் படையினரும் இடம்பெயர்ந்தோருமே எய்ட்ஸ் நோய்த் தாக்கத்துக்கு அதிகம் ஆளாகும் ஆபத்துள்ளவர்கள் என்று எச்சரித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த இரு சாராரும் - ஆயுதப் படையினரும், இடம்பெயர்ந்தோரும் - நிறைந்திருக்கும் இடங்களில் குடாநாடும் ஒன்று.

குடாநாட்டுக்குள்ளும், குடாநாட்டுக்கு வெளியிலிருந்தும் இடம்பெயர்ந்த - பெரும் எண்ணிக்கையான - மக்கள் அன்றாட ஜீவனத்துக்கு வழியின்றி குடாநாட்டில் உள்ள அகதிமுகாம்களிலும், தெரிந்தவர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேசமயம், குடாநாட்டில் 24 மணி நேரக் கடமை என்ற திட்டத்தோடு பல்லாயிரக்கணக்கான ரூபா வேதனம் பெறும் துருப்புகள் - பையில பணமிருக்க - தமது இயற்கைத் தேவைகளைக் கூட நிறைவு செய்வதற்குத் தங்கள் தங்களது வீடுகளுக்குச் செல்வதற்கு லீவு மற்றும் பயண வசதி வழங்கப்படாமல் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவை இரண்டு நிலைமைகளும் நமது சமுதாயச் சீரழிவுக்கு வழி செய்யும் ஈனத் தொழிலுக்கு இலகுவாக வழிகாட்டி நிற்கின்றன.

இதன் விளைவு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது. ஆபிரிக்கக் கண்டத்தில் சில நாடுகளில் மூன்றிலொரு பங்கினர் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகிவிட்டனர். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் - அவை எந்தத் தவறும் செய்யாமலேயே - இக்கொடிய நோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகளாகப் பிறந்து மனிதப் பேரவலத்தின் கொடூரச் சின்னங்களாய்க் காட்சி தருகின்றன.

உலக வங்கிப் பிரதிநிதி கூறுவது போல நாம் விரைந்து செயற்படாவிட்டால், நிலைமை மிகமிக மோசமாகும்.

'எய்ட்ஸ்' தடுப்பு நடவடிக்கையில் மிக முக்கியமானது பிரசாரம். இந்த நோயால் அதிகம் பீடிக்கப்படக்கூடிய - அல்லது இந்த நோயை விலைக்கு வாங்கக் கூடிய - இளவயதுச் சமுதாயத்துக்கு இந்நோய் குறித்தும், அது தொற்றாமல் இருப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மனதில் பதியக் கூடியதாக விளக்கமளிப்பது அவசர - அவசிய - நடவடிக்கையாக அமையவேண்டும்.

பத்திரிகை உட்பட வெகுசனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் ஏனைய பொது அமைப்புகளோடு ஒன்றிணைந்து திட்டம் வகுத்துச் செயற்பட்டாலன்றி, இந்தக் கொடூர அரக்கன் குடாநாட்டில் கால்பதித்து ஆழ வேரூன்றிப் பேரழிவைத் தருவதைத் தடுக்கமுடியாது போய்விடும். எனவே விரைந்து செயற்படுக! விழிப்போடு இயங்குக!!

## ஐவரைக் காணவில்லையென வவுனியாவில் முறைப்பாடு

வவுனியா,செப்.17

வவுனியாவில் 5 பேர் காணாமற்போயுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் கடந்த் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பூந்தோட்ட நலன்புரி முகாமைச் சேர்ந்தவர்களான சந்திரகுமார் தனலட்சுமி(வயது14), உருத்திரானந்தம் கஜேந்தினி(வயது17) ஆகியோரும் -

கணேசபுரத்தைச் சேர்ந்த செல்வராஜா கஜேந்திரன் (வயது15), செட்டிகுளத்தைச் சேர்ந்த பொன்னையா சந்திரகுமார்(வயது25), தலைமன்னாரைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெகநாதன்(வயது25)ஆகியோரே காணாமற்போயுள்ளதாக அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

பாவற்குளத்தைச் சேர்ந்த அரியரத்தினம் பிரதீப்(வயது21) என்பவரும் செட்டிகுளத்தைச் சேர்ந்தவர்களான பெனடிக்ற் செல்வநாயகம் (வயது30), வெள்ளையன் ஜெயசங்கர் (வயது33) ஆகியோர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(க-4)

## நாட்டு நடப்பு

உண்டி - VI

பிள்ளைக்குப் போச்சிப் பாலும்
புருசனாருக்குப் புட்டும் சம்பலும்
மெள்ளவே உடல் மெலிய
மென்மையாய் பிளேன் 'ரீ'யும்
நண்பகல் 'றோஸ்' பாண் துண்டும்
நாலு மணிக்கு ஒரு கப் 'ரீ'யும்
உண்டிடும் பெண்ணே! நீயும்
உடல் மெலிந்து வாடுறாயே!

- விகடகவி.

## மனைப்பொருளியல் கண்காட்சி

தென்மராட்சி,செப்.17

பருத்தித்துறைப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட மனைப்பொருளியல் பயிற்சி வகுப்பில் பயிற்சிபெற்றவர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களின் மனைப்பொருளியல் கண்காட்சி நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆத்தியடியில் உள்ள சம்மேளன அலுவலகத்தில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்படும்.

நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(ம-117)

## காரைநகரில் 65 பெண்களுக்கு கடன் உதவி

காரைநகர்,செப்.17

காரைநகர் மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் 'அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் ஐந்து லட்சம் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

சுயதொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வழங்கும் இந்நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காரை மத்தி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் நடைபெற்றது.

கால்நடை வளர்ப்பு, தையல், விவசாயம், சிறு வியாபாரம், கோழி வளர்ப்பு உட்பட பல்வேறு சிறு தொழில் முயற்சிகளுக்காக 65 பெண்களுக்கு இந்த ஐந்து லட்சம் ரூபா நிதியில் இருந்து சுழற்சி முறையாக கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-73)

## கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அவசர அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

திருகோணமலையில் நடைபெறவுள்ள செயலமர்வுக்கு செலலவிருக்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இன்று பிற்பகல் 3 மணிக்கு பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்துடன் யாழ். மணியம் கட்டடத்தில் இயங்கும் 'றான்' அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரெத்தினம் கேட்டுள்ளார்.

திருகோணமலை செல்வதற்கான பயணச்சீட்டு இன்று பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-7)

## வன்னியில் உணர்வுபூர்வமாக திலீபன் நினைவுதின நிகழ்வுகள்

வவுனியா,செப்.17

இந்திய இராணுவத்தினரை வெளியேறக் கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 14ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின.

வன்னிப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் சிறு சிறு கொட்டகைகள் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் உருவப்படம் வைத்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ள இந்த நினைவு தினத்தை முன்னிட்டு வன்னியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் சிரமதானம், கருத்தரங்குகள் மற்றும் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-4-7)

## மோ.சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்கு தெருச்சந்தியில் நேற்று முன்தினம் இரண்டு மோட்டார்சைக்கிள்கள் விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்களான யாழ்ப்பாணம் ஸ்ரேசன் சந்திப் பகுதியைச் சேர்ந்த குணரட்ணம் ஜெயராசா (வயது30) என்பவரும், நுணாவிலில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் வசிப்பவர்களான பசுபதி சந்திரசேகரன் (வயது60), அவரது மனைவி சந்திரசேகரன் விக்னேஸ்வரி (வயது 52) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

மூவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-15)

## கிராமிய கைப்பணியாளர் சங்கம் அமைப்பு

நவாலி,செப்.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைப்பணியாளர் சங்கம் அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இச்சங்கத்தின் முதலாவது கலந்துரையாடல் கூட்டமும் புதிய அங்கத்தவர்களைப் பதிவு செய்யும் நிகழ்வும் எதிர்வரும் 24ஆம் திகதி சங்கத் தலைவர் சி.மகாலிங்கம் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

(ம-100)

## பருத்தித்துறை ஓராம் கட்டையில் வாகன நெருக்கடியால் ஆபத்து!

யாழ்ப்பாணம்,செப்.17

பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்திப் பகுதியில் கனரக வாகனங்களின் நெருக்கடி மிகுதியால் விபத்துக்கள் நேரிடும் அபாயம் இருந்து வருகிறது.

துறைமுகத்தில் இருந்து பொருள்களை ஏற்றி இறக்குவதற்காகச் செல்லும் லொறிகள் அங்கு பல தினங்கள் தரித்திருக்க வேண்டிய நிலை இருப்பதனால், அவை யாவும் ஓராம்கட்டைச் சந்திப் பகுதியிலுள்ள காணி ஒன்றிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றன.

நாள் கணக்காக தரித்து நிற்கும் இந்த லொறிகள் பெருமளவு எண்ணிகையில் வருவதால் தரிப்பிடக் காணி இடம் போதாத நிலையில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியிலும், தம்பசிட்டி வீதியிலும் வீதியோரமாக நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

பிரதான பாடசாலைகள், பஸ் நிலையம், பிரதான அலுவலகங்கள், ஆகியவற்றிற்கு செல்வதற்காக மாணவர்கள் மற்றும் மக்கள் அனைவரும் செல்ல வேண்டிய பிரதான வீதிகளாக அமைந்திருக்கும் இந்த வீதிகளில் இவ்வாறு நிறுத்திவைக்கப்படும் கனரக (லொறி) வாகனங்களினால் சைககிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் மற்றும் சிறிய வாகனங்களும் அடிக்கடி விபத்துக்கு உள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை கூட பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று எதிரே வந்த இராணுவ 'டிரக்' ஒன்றுக்கு வழிவிட விலகிய வேளை வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் விபத்துக்குள்ளாகி சேதமேற்பட்டது.

லொறியின் கண்ணாடியும் உடைந்து சேதம் ஏற்பட்டது. தெய்வாதீனமாக எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை,

ப.நோ.கூ சங்க லொறிகள் துறைமுகத்திற்குள் செல்ல அனுமதி இல்லாத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்த மா மற்றும் பொருள்களை உட்செல்ல அனுமதியுள்ள லொறிகளில் ஏற்றிவந்தே வெளியில் வைத்து மாற்றிக்கொண்டு செல்லவேண்டிய நிலை உள்ளது.

இவ்வாறு ஏனைய லொறிகளில் எடுத்துவரப்படும் பொருள்கள், சங்க லொறிகளுக்கு, லொறிகள் தரித்து நிற்கும் ஓராம்கட்டைச் சந்திப் பகுதியிலேயே வைத்து மாற்றம் செய்யப்படுகின்றன.

இதனால் வாகன நெருக்கடி மேலும் அதிகரிக்கின்றது.

லொறிகள் தரிக்கும் இடத்தை வேறுஇடத்துக்கு மாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்

(க-15)

## மிதிவெடியில் சிக்கிக் காயம்

யாழ்ப்பாணம்,செப்.17

சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில் சுற்றாடலில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போது மண்வெட்டி மிதிவெடியில் பட்டு வெடித்ததால் ஒருவர் நெஞ்சிலும், கண்ணிலும் காயமடைந்தார்.

கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி கிழக்கில் வசித்துவரும் தம்பிராசா இராசலிங்கம் (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-15)

## 'பென்டோச் பற்றரி' கொண்டு சென்றவர் கைது!

தென்மராட்சி,செப்.17

அழகுசாதனப் பொருள்களுடன் பென்டோச் பற்றரிகளைக் கொண்டு வந்த வியாபாரி ஒருவர் வல்லை சோதனைச் சாவடியில் படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்புப் பிரிவில் வைக்கப்பட்டிருந்த சுன்னாகத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் கண்ணதாசன் என்ற அந்த நபரை நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை ஒக்ரோபர் பத்தொன்பதாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-117)

### நாளை

புரட்டாதி 02
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
பிற்பகல் 2.41 வரை.
நட்சத்திரம் : உத்தரம்
முற்பகல் 9.12 வரை.
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 3.03 - 4.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சந்தேகம் எப்பொழுதும் குற்றமுள்ள மனதிலேதான் சஞ்சரிக்கிறது.

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# தமிழர்களின் பூர்வீகக் கலைகளை ஒரே மேடையில் காட்சிப்படுத்திய நிகழ்ச்சி

## யாழ்.மருத்துவ சங்கத்தினர் வழங்கிய கலாசார நிகழ்வு

தமிழர்களின் பூர்வீகக் கலைகள் பலவற்றுக்கும் புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். இதன் மூலமே தமிழர்



கலாசாரத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

யாழ்.மருத்துவ சங்கம் கடந்த மாதம் 10ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்திய கலாசார நிகழ்ச்சிகள் இதனையே பறைசாற்றின.

யாழ்.மருத்துவ சங்கம் தனது வருடாந்த அமர்வை முன்னிட்டு இந்தக் கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தது. யாழ்.குடாநாட்டில் உள்ள அனேக மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், மருத்துவ ஆர்வலர்கள், கலைஞர்கள் பல்கலைக் கழகத்தின் ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் என ஆயிரக் கணக்கானோர் இந்த நிகழ்வுகளைக் காண்பதற்கென கைலாசபதி கலையரங்கில் ஒன்று கூடியிருந்தனர்.



தமிழர்களுடைய பாரம்பரியக் கலைகளை அழியவிடாது பேண வேண்டும் என்ற சிந்தனை பல்வேறு தரப்பினரிடையேயும் வலுவூன்றத் தொடங்கிவிட்டது என்பதைப் பறை சாற்றுவது போல் அமைந்த இந்த நிகழ்ச்சிகள் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணியளவில் மருத்துவ சங்கக் கீதத்துடன் ஆரம்பமாகின.

மருத்துவ சங்கத்தின் வளர்ச்சி, சிறப்பு, நோக்கம் இன்னும் பல்வேறுபட்ட அம்சங்களை அந்தக் "கீதம்" எடுத்துக்கூறியது.

கீதத்தைத் தொடர்ந்து மின்னிணைப்பில் ஏற்பட்ட கோளாறு, மேடை ஒழுங்கமைப்பில் ஏற்பட்ட தாமதம் என்பன காரணமாக நிகழ்வுகளை குறிப்பிட்ட நேரத்துக்கு ஆரம்பிக்கவோ, நிறைவு செய்யவோ முடியாது போயிற்று. மின்னிணைப்பில் ஏற்பட்ட கோளாறு நிகழ்வுகள் சிலவற்றின்



தனித்துவத்தை சீர்குலைய வைத்ததையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

பிற்பகல் 3.15 மணியளவில் திரை விலகுகின்றது. முதல் நிகழ்வு நாகசுர இசையுடன் ஆரம்பமானது. இணுவில் நாகசுரவித்துவான் அமரர் கோவிந்தசாமியின் புத்திரர்களும், அவர்தம் குழுவினரும் நாகசுர இசை வழங்குகின்றனர். தமிழர் கலைகளுக்கு புத்துயிர்ப்பு ஏற்பட்டது போன்ற உணர்வுடன் நாதமழை பொழியப்பட்டது.

அரங்கில் இருந்த அனைவரும் ஆடாமல் அசையாமல் இருந்து மேடையை உற்றுநோக்கினர். எல்லோரையும் தெய்வீக அலைக்குள் இழுத்துச் செல்வது போன்ற உணர்வை நாகசுர இசை ஏற்படுத்தியது.

தவில் வித்துவான்களும் கலையை வளர்க்கத் திடசங்கற்பம் பூண்டவர்கள் போல் தவில் இசை பொழிந்தனர்.

நாகசுர வித்துவான்கள் இசை மழையைப் பொழிந்துவிட்டு அரங்கை விட்டு அகல, இந்துக்களின் பாரம்பரிய ஆடற் கலைகளில் ஒன்றான 'கரகம்' ஆடும் சிறுவர்கள் 5 பேர் தலையில் கரகங்களைத் தாங்கியவாறு அரங்கினுள் அவர்களுக்கே உரிய ஆட்டத்துடன் பிரவேசித்தனர். கரகம் ஆடுபவர்களுக்குரிய பாரம்பரிய உடையுடன் காணப்பட்ட அந்தச் சிறுவர்களின் கையில் வேப்பிலையுடன், பக்தி மயமான கோலத்துடன் காணப்பட்டனர்.

முருகன், முத்துமாரி, பத்திரகாளி ஆகிய தெய்வங்களுக்குரிய வழிபாட்டுப் பாடல்களை பின்னணிப் பாடகர்கள் பாட, கரகாட்டக்காரர்கள் அற்புதமாக ஆடி அசர வைத்தனர்.

தமிழர்தம் பிரதேசங்களில் மிகவும் அருகிவரும் கலைகளில் ஒன்றான 'கரகக்கலை'யை வளர்த்தெடுக்க அனைவரும் தத்தமது பூரண ஆதரவை வழங்கவேண்டும் எனக் கேட்பது போன்று அந்தச் சிறுவர்களின் ஆட்டம் அமைந்திருந்தது.

'கரகம்' ஆடும் சிறுவர்கள் அரங்கைவிட்டு அகல மகாபாரதக் கதையை மையமாகக் கொண்ட 'வடமோடிக் கூத்து'க் கலைஞர்கள் தமக்கேயுரிய ஆடை, அணிகலன்களுடன் - மிகச் சிறந்த ஒப்பனையுடன் -

### கலைச்சுடர்

தயாரிப்பு:-நர்த்தகன்

ஆட்டத்துடன் அரங்கினுள் பிரவேசித்தனர்.

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் மகாபாரதத்தில் இடம்பெறும் 'சடாசுரவதம்' என்னும் கதையம்சத்தை, வடமோடிப் பாணியில் ஆடிக்காட்டினர். மத்தளம், தாளம் ஆகியவற்றின் துணையுடன் இந்தக் கூத்து ஆடப்பட்டது. கலைஞர்கள் துள்ளிக் குதித்து மிகுந்த கலையார்வம் மிக்கவர்களாய் கூத்துடன் ஒன்றித்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி பயின்று கொண்டிருக்கும் பட்டதாரி மாணவர்கள் பலர் இந்தக் கூத்தில் பங்குபற்றினர். முன்னொரு காலத்தில் இரவிரவாக ஆடப்பட்ட இந்தக் கூத்து அன்று மேடையில் சுமார் இருபது நிமிட நேரம் மட்டுமே ஆடப்பட்டது.

தொகுப்பு: ஆனந்தன்

வடமோடிக் கூத்துக் கலைஞர்கள மேடையைவிட்டு அகல, முரசறையும் கலைஞர்கள் முரசறைந்தவண்ணம் அரங்கினுள் உள்நுழைந்தனர். தமிழர் சமூகத்தில் இன்று மறைந்து செல்லும் நிலையிலுள்ள கலைகளுள் பிரதானமானது முரசுக் கலையாகும். இதனை "பறை" எனவும் அழைப்பர். முரசுகளில் இருந்து வெளிவந்த ஒலி சபையில் இருந்த அனைவரையும் ஒருகணம் அதிரவைத்ததென்றே கூற வேண்டும். தமிழ்ச் சமூகம் முரசுக் கலையை வளர்ப்பதில் முன்னின்று செயற்பட வேண்டும் என்பதை இந்த நிகழ்வு சுட்டிக்காட்டி நின்றது.

அடுத்து, தாளக்காவடி ஆடும் மாணவர்கள் இருவர் காவடிகளைத் தாங்கியவாறு அரங்கினுள் பிரவேசித்தனர். இனிய பாடல் - இசை - நெறிப்படுத்தல் தாளக்காவடியை வெகுபிரமாதமான நிகழ்ச்சி ஆக்கியது. மருத்துவபீட மாணவர் ஒருவர் தனது இனிய குரலில் பாடிய தாளக் காவடிப் பாட்டு நிகழ்வை தனிரகமாக்கியது. மேடையில் ஒருபக்கத்தில் இருந்த இந்தத் தாளக்காவடியை நெறிப்படுத்திய கலாபூஷணம், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரையின் கலை ஆர்வமும் நிகழ்வுக்கு மெருகு அளித்தது. வயது முதிர்ந்து - நடக்க முடியாத நிலையை எய்தியபோதும் தமிழர் பாரம்பரியக் கலையை வளர்ப்பதில் அவருக்கு இருக்கும் ஆர்வம் கலையுலகத்தினால் என்றும் போற்றப்பட வேண்டியது. மின்னிணைப்பில ஏற்பட்ட கோளாறு தாளக்காவடி நிகழ்வின் தனித்துவத்தைப் பார்வையாளர்களுக்கு அளிக்கத் தவறிவிட்டது போலும்.

அடுத்து சிலம்புக்கலையை வெளிப்படுத்தும் கலைஞர்கள் (வீரர்கள்) வீரதீரசாகஸங்களுடன் அரங்கினுள் பிரவேசித்தனர். இந்தக் கலை தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாகவும், தற்பாதுகாப்புக் கலையாகவும் விளங்கிவந்தது. "கம்பு" களைத் தாங்கிய இளைஞர்கள் பல்வேறு வீரத்தின் வெளிப்பாடுகளை பார்வையாளர்கள் மெய்சிலிர்க்கக் கூடியவாறு காட்டி நின்றனர். பல்குழல், ஷெல் முதலிய ஆயுதங்கள் புழக்கத்தில் இல்லாத காலத்தில் சுய ஆற்றலை, திறமையை வெளிப்படுத்துவதிற்குப பயன்பட்ட சிலம்புக் கலையை இன்றைய இளைய சமூகம் பின்பற்றுவது - பயில்வது வரவேற்கத்தக்கது.

அடுத்து பரதநாட்டியம் ஆடும் மாணவியர்கள் மூன்று பேர் அதற்கேயுரிய ஆடை, அணிகளுடன் அரங்கினுள் நுழைந்தனர். அவர்களின் பரதத்துக்குரிய பாட்டுக்கள், நெறிப்படுத்தல்கள் உரிய முறையில் செய்யப்பட்டிருந்தன. சபையில் இருந்த அனைவரும் மிகவும் அமைதியாக இந்த நிகழ்வை உற்றுநோக்கி ரசித்தனர்.

ஆட வல்லானாம் எல்லாம்வல்ல எம்பெருமானின் திருவுருவத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது போல் பரதநாட்டிய நிகழ்வு அமைந்திருந்தது.

பரதநாட்டியத்தை அடுத்து காத்தவராயன் கூத்து அரங்கில் இடம்பெற்றது. தமிழர் வரலாற்றில் ஒரு காலத்தில் இரவிரவாக ஆடப்பட்ட இந்தக் கூத்து இன்று காலம், நேரம், இடம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு குறுகிய நேரத்தில் ஆடப்பட்டு வருகிறது. முத்துமாரியம்மன், சிவன், காத்தான் ஆகிய பாத்திரங்கள் மேடையில் தோன்றி சிந்துப்பாணியில் கண்குளிர - செவி இனிக்கக் கூத்தை வழங்கினர். சபையில் இருந்த அனைவரும் மெய்மறந்து தாளம் போட்டவாறு நிகழ்வை ரசித்ததைக் காண முடிந்தது.

அடுத்து கோலாட்டம் ஆடும் சிறுமியர்கள் இரண்டு கைகளிலும் கோல்களைத் தாங்கியவாறு, அழகிய வண்ண ஆடைகளுடன் மேடையில் தோன்றினர். அவர்களின் சலங்கைகளில் இருந்து எழுந்த ஒலி புதிய



அனுபவமாக அமைந்தது. முன்னொரு காலத்தில் கிராமப்புற ஆலயங்களில ஆடப்பட்ட இந்தக் கோலாட்டமரபு இன்று பெரிதும் ஆலயங்களில் ஆடப்படுவதில்லை என்றே கூறவேண்டும். எனினும் இத்தகைய மருவிச் செல்லும் கலைகளைப் பேண எடுக்கப்பட்ட முயற்சியை மனதாரப் பாராட்டத்தான் வேண்டும். கோலாட்டத்துக்கான பாட்டு, நட்டுவாங்கம், மிருதங்கம் போன்ற பக்கவாத்தியங்கள் நன்றாக அமைந்தன. ஐம்பெரும் நிலங்களில் ஒன்றான குறிஞ்சி நிலப்பாங்கை சிறுமிகள் ஆடிக்காட்டினர்.

தொடர்ந்து குடநடனம் இடம்பெற்றது. ஒரே நிற ஆடையணிந்த மாணவிகள் கைகளில் குடங்களைத் தாங்கியவாறு துள்ளித்துள்ளி நடனம் ஆடினர். எந்தக் கருமத்தையும் ஆடல், பாடல்களுடன் செய்தால் அலுப்பிருக்காது என்பதை குடத்தில் நீர் அளளச் செல்லும் பெண்கள் ஆடும் ஆட்டம் (நடனம்) எடுத்துக் காட்டியது. இதற்கான வயலின், நட்டுவாங்கம், வீணை, மிருதங்கம் முதலியனவும் நன்றாய் அமைந்திருந்தன.

### புரவி நடனம்

அடுத்து புரவி நடனம் இடம்பெற்றது. இது மனித உயிரோட்டம் கொடுக்கும் ஜோடிக் குதிரைகளின் நடனமாகும். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரண்டு கலைஞர்கள் இந்த நடனத்தை வழங்கினர். மிகுந்த உடற்பயிற்சியை இந்த நடனம் வழங்கக் கூடியது. பாரம்பரியக் கலைகள் பலவற்றுக்கும் விளைநிலமான வட்டுக்கோட்டையில் இந்த நடனம் இன்றும் நிலவிவருகிறது.

தொடர்ந்து உடுக்கு இசைத்தவணம் மாதனையைச் சேர்ந்த மூன்று கலைஞர்கள் அரங்கினுள் பிரவேசித்து உடுக்கு மூலம் இசை முழங்கினர். கிராமப் புறப்பகுதிகளில் வேள்வி, மடை போன்றவற்றின் போதும், கூத்துக்களின் போதும் உடுக்குப் பயன்படுத்தப்பட்டது.



படங்கள்: யாழ்.அரவிந்த்

தொடர்ந்து தீப்பந்த சாகசம், 'எய்ட்ஸ்' பற்றிய சிந்தனைக் கருவை மையமாகக் கொண்ட நாடகம் என்பன இடம்பெற்றன. 'எய்ட்ஸ்'க்கு இலக்கான இருவர் நோயின் கொடூரம் காரணமாக அந்த நோயைத் தமக்குப் பரப்பியவர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்களை மர்மமான முறையில் கொலைசெய்துவிட்டு, இறுதியில் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதை தத்ரூபமாக நாடகம் எடுத்துக் காட்டியது. ஆங்கில மொழியில் அமைந்த இந்த நாடகம் சபையோரைச் சிந்திக்க வைத்தது என்றால் மிகையில்லை. முற்றிலும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த வைத்திய மாணவ, மாணவியர் இதனை வழங்கியிருந்தனர்.

தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் பாராட்டும் வகையில் மேற்படி நிகழ்வுகள் அடுத்தடுத்து மேடையேற்றப்பட்டமை பார்வையாளர்கள் மத்தியில் பெரும் ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. யாழ்மருத்துவ சங்கத்தின் தலைவரும், நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் வி.குணானந்தம் துடிதுடிப்புடன் செயற்பட்டு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தியதையும் காணமுடிந்தது.

எனினும் ஒவ்வொரு நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்பு முற்றிலும் ஆங்கிலத்தில் அமைந்திருந்தமை சபையோரிடையே சலசலப்பை ஏற்படுத்தியதையும் அவதானிக்க முடிந்தது.



நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
**பேராசிரியர் வி.குணானந்தம்**

ஆங்கில மூல அறிவிப்புப் பற்றி மருத்துவபீட மாணவர்கள் தரப்பில் வினவப்பட்ட போது அன்றைய நிகழ்வுக்கு வெளிநாட்டவர் ஒருவர் பிரதம விருந்தினராக வரவிருந்தார் என்றும் அவர் வருகைக்காகவே ஆங்கில மூல அறிவிப்பு ஒழுங்கு செய்யப்படடிருந்ததாகவும் கூறப்பட்டது.

எனினும் அன்றையதினம் மேற்குறித்த பிரதிநிதி அங்கு சமுகமளிக்கவில்லை. இடை இடையே நிகழ்ச்சி பற்றிய அறிவிப்புகளை தமிழிலும் வழங்கியிருக்கலாம் எனப் பார்வையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

✲




# உண்மை நிலை :

## 10 லட்சம் தொழிலாளர்கள் கொண்ட 891 ஆடைத்தொழிற்சாலைகள் தெற்கில் உள்ளன. வடக்குக் கிழக்கிலோ பத்திற்கும் குறைவான ஆடைத்தொழிற்சாலைகளே உள்ளன.

நிரந்தரமாக அமைதி நிலவுமேயானால் பல்லாயிரம் பேருக்குத் தொழில் வழங்கவல்ல ஆடை உற்பத்தித்துறை தெற்கிலிருந்து வடக்கு வரை திறனுடன் வளர்ச்சியடையும்.

## செப்டம்பர் 19ல் கைகோர்த்து ஒன்றிணைவோம்.

ஸ்ரீலங்கா First


இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

புள்ளி விபரம் : மத்திய வங்கி, தேசிய சமாதானப் பேரவை, மார்க்கா நிறுவனம்.

இதனை வெட்டித் தொங்கவிடவும் / போட்டோ பிரதிகளை எடுத்து விநியோகிக்கவும்.

(C/18287)



"எனது வாழ்க்கை முழுவதும் ஏழைகளுடனும் ஒதுக்கப்பட்டவர்களுடனுமே நான் பணியாற்றியுள்ளேன். நான் பெற்றவை அத்தனையும் அஹிம்சை வழி ஊடாகவேதான். அமைதியில் எனக்கு பூரண நம்பிக்கையுண்டு. எனது பணியின் அடித்தளமும் அதுவேதான்.

அமைதிக்குப் பாடுபடும் என்னுடன் இன்று இணையுங்கள். வேறு எதையும் விட நமது நாட்டிற்குத் தயவு செய்து முதலிடமளியுங்கள்."

கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன

**செப்டம்பர் 19 ல் மு.ப 11.55 ற்கு பிரதான வீதி ஒன்றிற்கு வந்து கைகோர்த்து ஒன்றிணைவோம்.**


**ஸ்ரீலங்கா First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு. இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை [illegible]த்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், மனிதாபிமான வள தொழில்சார் தகைகள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

இணையத் தளம் : www.srilankafirst.com

(C/18289)



# உண்மை நிலை :

## 1982 லிருந்து யுத்தத்திற்காக 400 பில்லியன் ரூபாயிலும் அதிகம் செலவாகியுள்ளது. இதனைக் கொண்டு பின்வருவனவற்றை நிர்மாணித்திருக்கலாம்.

1 முழுமையான மகாவலி அபிவிருத்தித் திட்டம்
4 அனல் மின் நிலையங்கள்
2 சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டங்கள்
1 பாரிய துறைமுக அபிவிருத்தித் திட்டம்
8 பல்கலைக்கழகக் கட்டிடத் தொகுதிகள்
4 கொழும்பு - கண்டி அதிவேகப் பாதைகள்
4 கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேகப் பாதைகள்
1 மின்சார றெயில்வேத் திட்டம்
5 சர்வதேச ஒளிரும் கிரிக்கட் மைதானங்கள்
11,000 பாடசாலைக் கணனிக் கூடங்கள்
என்பவற்றுடன் இன்னும் பற்பல....

**பேச்சுவார்த்தை மூலமான அமைதி பல பில்லியன்களை, அழிவிற்கன்றி, நம் நாட்டினைக் கட்டியெழுப்பப் பயன்படுத்த உதவும்**

## செப்டம்பர் 19ல் மு.ப 11.55 ற்கு பிரதான வீதி ஒன்றிற்கு வந்து கைகோர்த்து ஒன்றிணைவோம்.

**ஸ்ரீலங்கா First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், மனிதாபிமான வள தொழில்சார் தகைகள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.
புள்ளி விபரம் : கட்டமைப்பு முதலீட்டு பணியகம், தேசிய சமாதானப் பேரவை, மார்க்கா நிறுவனம்.

(C/18288)

இதனை வெட்டித் தொங்கவிடவும் / போட்டோ பிரதிகளை எடுத்து விநியோகிக்கவும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கைமாறிவிட்டது

NOCKIA CORD LESS PHONE HANDSET கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது கைமாறிவிட்டது. மாறி எடுத்தவர்கள் தயவுசெய்து 021-3280 என்னும் தொலைபேசி இலக்கததுடன் தொடர்புகொள்ளவும். (92371)

## விற்பனைக்கு

யமஹா 2800 ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. அ.செல்வம், இல. 171, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மகள்வங்கிக்கு அருகில்) என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (92299)

புத்தம்புதிய SAM SUNG (465x 492x558MM) குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 424 1/1, கில்னர் லேன், யாழ்ப்பாணம். (92351)

## இலகு திருமண சேவை

1968, புநர்பூசம், செவ்.7, G.A.Q. படித்த, பிரபல நிறுவன உரிமையாளருக்கு மணப்பெண் தேவை. (சைவ உணவு விரும்பத்தக்கது) மணமக்கள் சேவைகளைப் பெற நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (92369)

## ஆங்கில வகுப்புகள்

A/L மாணவர்களுக்கும், A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் புதன் கிழமை (19.09.2001) ஆரம்பம். தொடர்பு: நாகேந்திரம் (ஆசிரியர்), இல.34/4, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (92261)

## வீடற்றவன்

சி.வி.வேலுப்பிள்ளையின் "வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. 10ஆம், 11ஆம் தர மாணவர்கள் தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். 50 பக்கங்கள்: விலை ரூபா 25.00. (92372)


**வாங்கிவிட்டீர்களா?**

மின்னல் புரட்டாதி மாத இதழ்

மாணவர்களுக்கான விஞ்ஞான, பொதுஅறிவு சஞ்சிகை.

ஆசிரியர்: சின்னத்தம்பி பத்மராஜன்

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவர்களுக்கான போட்டிகள் முடிவு திகதி: 30.09.2001 (92347)

தாரிகை

**தாரிகை**

நுண்கலை வளாகம்

★30.09.2001 வரை புதிய மனைப் பொருளியல் பயிற்சிநெறிகளில் ஏதாவது ஒன்றில் கலந்துகொண்டாலும் அவர்களுக்கு "கைவினைத் திறன்" அல்லது "துணி வர்ணமிடல்" பயிற்சி இலவசமாகும்.

சான்றிதழுடன் கூடிய 3 மாதப் பயிற்சிநெறிகளுக்கான முழுமையான கட்டணம் ரூபா 350/=.

★அனுமதிகள் வழங்கப்படுகின்றன!

செங்குந்தா வீதி, கல்வியங்காடு, திருநெல்வேலி.

வடமராட்சியில்.... ம.ம.வி. வீதி, நெல்லியடி. (C-18296)

**விபூதி, இலக்கண வினாவிடை விற்பனைக்கு**

சைவ அபிமானிகளே!

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழக வெளியீடுகளான

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இலக்கண வினாவிடை 20/=

ஸ்சாத்திர விதிமுறைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விபூதி 10/=

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெறுமிடம்:

**ரூபன் புத்தகசாலை**

605, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (92352)

**வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச கலை கலாசார பேரவை நடத்தும்**



**சாகித்திய விழா - 2001**



இடம் :- குடத்தனை (நூல் நிலையத்துக்கு அருகில்)

காலம் :- நாளை (2001-09-18) செவ்வாய்க்கிழமை பகல் - இரவு

தலைவர் :- திரு.வி.ப. வேலாயுதம்பிள்ளை (உதவி அரசாங்க அதிபரும், வடமராட்சி கிழக்கு பிரதேச கலை கலாசார பேரவையின் தலைவரும்)

பிரதமவிருந்தினர்:- திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (தலைவர், பிரதேச சபை பருத்தித்துறை)

சிறப்புவிருந்தினர்கள்:- திரு.செல்லையா மெற்றாஸ்மயில் (செயலாளர், பாரம்பரிய மேம்பாட்டுக் கழகம்)
திரு.சு.புத்திசிகாமணி (பிரதேச செயலர், பளை)
திரு.ம.ஜோசெப் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

**நிகழ்ச்சிகள் பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும்**

- மங்கள விளக்கேற்றல்
- மௌன இறை வணக்கம்
- வரவேற்புரை :- திரு.க.யோகேந்திரநாதன் (கிராம அலுவலர், குடத்தனை)
- தலைமையுரை
- சிறப்புவிருந்தினர் உரை
- பிரதமவிருந்தினர் உரை

**கலை நிகழ்ச்சிகள்**
- கரகம்
- காவடி
- வில்லிசை
- 20க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றும் பக்திப் பாடல்கள்

**நிகழ்ச்சிகள் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்**

| | | |
|---|---|---|
| திரு.எஸ்.இராசரத்தினம் | அவர்கள் நெறியாளுகையின் கீழ | "ஸ்ரீவள்ளியின் ஸ்கந்த லீலை" |
| செல்வி செ.சோபனா | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "இராமாயணம்" |
| திரு.எஸ்.இராசரத்தினம் | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "செஞ்சோற்றுக் கடன்" |
| திரு.கு.செகராசா | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "நல்ல தங்காள்" |
| திரு.கு.றோக் | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "பரிசாய் வந்த சிரசு" |
| திரு.றோக்கு யூட்சன் | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "வித்துக்கள்" |
| [illegible].துரைச்சாமி | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "ஞானசவுந்தரி" |
| திரு.எஸ்.இராசநாயகம் | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "உறவுகள் தொடரும்" |
| திரு.எஸ்.துரைச்சாமி | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "வீரபாண்டிய கட்டப்பொம்மன்" |
| திரு.க.அருளானந்தன் | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "அழியும் கோலங்கள்" |
| திரு.எஸ்.துரைச்சாமி | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "பாசத்தின் முடிவு" |
| திரு.எஸ்.துரைச்சாமி | அவர்கள் நெறியாளுகையின் கீழ் | "சிரிப்புடன் சிந்தியுங்கள்" |

நன்றியுரை : செல்வி அ.மிலாசினி (கலாசார உத்தியோகத்தரும் வடமராட்சி கிழக்கு கலை கலாசார பேரவையின் செயலாளரும்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

உதவி அரசாங்க அதிபரும், வடமராட்சி கிழக்குப் பிரதேச கலை கலாசார பேரவையினரும்.

விளம்பர அன்பளிப்பு:-

**உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்,**

வல்லிபுரம், புலோலி. (C-18297)


# கல்விச்சாலைக் காட்சிகள்



புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா முன்பள்ளிச் சிறுவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. அங்கு இடம்பெற்ற விநோத உடைப் போட்டியில் சிறுமி ஒருத்தி 'உதயன்' பத்திரிகைப் பிரதிகளால் தயாரிக்கப்பட்ட ஆடையை அணிந்துகொண்டு கொடுத்த காட்சி. (ஐ)



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் நடத்திய வருடாந்த ஒன்றுகூடலும் விருந்துபசார நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் ரி.குகனேசன் உரையாற்றுவதையும். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, கல்லூரி அதிபர் ந.பரமசிவம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-73)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற 'புதுயுகம் நோக்கி' என்ற கண்காட்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்விக்கோட்டப் பணிப்பாளர் ஆ.இராஜகோபாலை மாணவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்க உபசெயலாளர் 'சமூகஜோதி' கா.கணேசதாசன் அருகில் காணப்படுகிறார்.

*(படம்: அரியாலை செய்தியாளர்)*



கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம், பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரன், கலாநிதி ப.புஷ்பரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

# இக்கட்டான அரசியல் சூழ்நிலையில்
# அரசுக்கு விலங்கிட்டுள்ளது ஜே.வி.பி.

## ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

மட்டக்களப்பு, செப். 17
இன்று அரசாங்கத்திற்கு அடிமை விலங்கிடப்பட்டுள்ளது. இக்கட்டான ஓர் அரசியல் சூழ்நிலையில் ஜே.வி.பியினர் அரசுக்கு விலங்கைப் பூட்டி விட்டுள்ளனர். — இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

மருதமுனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் நிறைவு மலர் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய போதே ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

நாம் அனைவரும் பொதுத் தேர்தல் ஒன்றை மட்டுமே எதிர்பார்த்திருக்கின்றோமே தவிர பட்டம் பதவிகளை அல்ல. இந்நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்று இடம் பெற்றால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு, சுமுகமான தீர்வுக்கு பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்பேற்படும்.

சமகால அரசமைப்புப் பற்றி நாம் இன்று அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இன்று அரசாங்கத்திற்கு அடிமை விலங்கிடப்பட்டுள்ளது. கால்களையும், கைகளையும் ஜே.வி.பியினர் கட்டிவிட்டார்கள்.

அண்மையில் நான் ஜனாதிபதியுடன் பேசியிருந்தேன் அப்போது நான் முதலில் அமைச்சுப் பதவிக்காக வரவில்லை என்றும், இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையில் அரசும்—எதிர்க் கட்சியும் பொது இணக்கப்பாட்டுடன் பேச வேண்டும். இதற்கான அனுசரணையாளராகத்தொழிற்படவே விருப்பம் தெரிவித்திருந்தேன்—என்றார். (க)

# நுளம்பு வலைக்கு மருந்து தோய்க்கும் பணி ஆரம்பம்

வடமராட்சி, செப், 17
துன்னாலைப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் ஏற்கனவே வழங்கப்பட்ட நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்க்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் வல்லிபுரக்குறிச்சியிலும், 22 ஆம் திகதி குடவத்தையிலும், 24 ஆம் திகதி துன்னாலை தெற்கிலும், 25 ஆம், 26 ஆம் திகதிகளில் துன்னாலை மேற்கிலும், 27 ஆம் திகதி தல்லையப்புலத்திலும் மேமத்திரின் மருந்து தோய்க்கும் பணி நடைபெறவுள்ளது.

இப்பகுதிகளைச் சேர்ந்தோர் நுளம்பு வலைகளை கழுவிக்காய வைத்த பின் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-173)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், செப். 17
இருபாலை கிழக்கு — முனி கோவிலடி வீதி, பல வருடங்களின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (ஐ-7)

# தந்தை செல்வா நினைவாக வரலாற்று நூல் வெளிவரும்

## குறுந்திரைப்படம் தயாரிக்கவும் முடிவு

யாழ்ப்பாணம், செப். 17
தந்தை செல்வா மறைந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுறுவதை யொட்டி அவரின் நினைவாக அடுத்த வருடம் (26-04-2002) வரலாற்று நூல் ஒன்றை வெளியிடவும் தந்தை பற்றிய குறுந்திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் தந்தை செல்வா அறங்காவற்குழு தீர்மானித்துள்ளது.

தந்தை செல்வாவின் நாடாளுமன்ற உரைகள், மாநாட்டுத் தலைமை உரைகள், அவர் பற்றிய பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஒரு வரலாற்று ஆவணமாக இந் நூல் வெளியிட ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நூலைச் சிறப்பாக வெளியிடுவதற்கு தந்தை பற்றிய ஆவணங்கள், வெளியிடுகள், பத்திரிகைக் குறிப்புக்கள், புகைப்படங்கள்போன்றவற்றை அனுப்பி உதவுமாறு தந்தை செல்வா அறங்காவற்குழு பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

தந்தை செல்வாவின் இருபத்தைந்தாவது ஆண்டு நினைவாக நூல் வெளியிடுதல், குறுந்திரைப்படம் வெளியிடுதல் என்பவற்றுடன் வருடாவருடம் நினைவுப் பேருரைகளை நடத்துதல், நினைவுத் தூபியை அழகுபடுத்திப் பாதுகாத்தல் போன்ற வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்ல அறங்காவற்குழு தீர்மானித்துள்ளது. (க-ரி)

## குண்டும் குழியுமாக காணப்படும் பிரப்பங்குளம் வீதி

குருநகர், செப். 17
மானிப்பாய் வீதிக்கும் கே. கே. எஸ் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள பிரப்பங்குளம் வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக்காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் — மானிப்பாய் வீதியூடாக தற்போது பஸ் சேவைகள் நடைபெற்று வருகின்றன. இதனால் முக்கியத்துவம் அற்ற சிறிதளவு சேதமடைந்த வீதிகள் கூட தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றன எனினும் குண்டும் குழியுமாக சேதமடைந்த நிலையில் உள்ள பிரப்பங்குளம் வீதியை சம்பந்தப்பட்டவர்கள் கண்டும் காணாதது போன்று நடந்து வருவது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-51)

## முதியோர்களை கௌரவிக்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு, செப். 17
சர்வதேச முதியோர்தினம், சர்வதேச சிறுவர் தினம் ஆகியவற்றை ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் ஒன்றாக இணைத்து பிரமாண்டமான முறையில கொண்டாட வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், முதியோர்களைப் பேணுதல் தொடர்பான பல கலை நிகழ்ச்சிகளை நடத்தவும்—

முதியோர்களை இத்தினத்தில் கௌரவிக்கவும் இன்னும் பல நிகழ்வுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (க-152)

## கல்வி ஊக்குவிப்பு போட்டிகள்

காரைநகர் செப் 17
காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை முன்பள்ளி மாணவர்களிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் செப்ரெம்பர் மாதத்துக்கான போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெற உள்ள இந்தப் போட்டிகளில் காரைநகர் பகுதியில் உள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்ற உள்ளதாக நல்லியக்கச் சபை செயலர் எஸ். பத்மநாதன் தெரிவித்தார். (ஐ-73)

## பசுமாடு யாருடையது?

தென்மராட்சி, செப். 17
தென்மராட்சிப் பகுதியிலிருந்து கடத்திவரப்பட்ட போது கடந்த மாதம் கொடிகாமம் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டு பொலீஸ் நிலையத்தினால் பராமரிக்கப்பட்ட பசுமாடு தற்போது சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த மாட்டின் உரிமையாளர் நீதிமன்றில் தொடர்பு கொண்டு மீட்டுச் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## காரைநகரில் கோழிகள் திருட்டு

காரைநகர், செப். 17
காரைநகர் களபூமிப் பகுதியில் உள்ள வீடுகளில் இரவு வேளைகளில் திருடர்களினால் கோழிகள் திருடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களில் நூறுக்கும் மேற்பட்ட கோழிகள் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகவும் இந்தத் திருட்டை தடுப்பதற்காக இப்பகுதி மக்கள் விழிப்புக்குழு ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-73)

## குருநகரில் கலைவிழா

குருநகர், செப். 17
குருநகர் இளைஞர் கலைக் கழகம் நடத்தும் கலைவிழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு குருநகர் கலையரங்கில் நடைபெறஉள்ளது.

இந்நிகழ்வில் கவிதை அரங்கு, நடனம், ''கடலோரக்கச்சேரி'', நாடகம் ஆகியவை இடம்பெற உள்ளன. (க-51)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலிகாமம் வலய உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

★ சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

(க-86)

★ ★ ★

வலிகாமம் வலய தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஆரம்பமாகின்றன.

நாளை நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதின் கீழ்

★ வயாவிளான் ம. வி. எதிர் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்.

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோ. க. பாடசாலை.

### 18 வயதின் கீழ்

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் ம. வி.

(க-86)

## கொழும்பில் நடைபெறவுள்ள
# ஊனமுற்றோர் பயன்படுத்தும் உபகரணங்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 17
சமூக சேவைகள் மீனவ வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் ஊனமுற்றோர்களின் பயன்பாட்டுக்கான உபகரணங்களை உள்ளடக்கிய மாபெரும் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது

ஊனமுற்றோர் தினத்தையொட்டி நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் சக்கரநாற்காலிகள், முச்சக்கர வண்டிகள், ஊன்றுகோல்கள், காதுகேட்கும் கருவிகள் மற்றும் நவீன உபகரணங்களும் பார்வைக்கு வைக்கப்படும்.

இக் கண்காட்சியில் உற்பத்திப் பொருள்களையும் பார்வைக்கு வைக்க விரும்பும் உற்பத்தியாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரதேச செயலாளர் பிரிவு சமூகசேவை உத்தியோகத்தர்கள் அல்லது அலுவலர்களையோ அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-86)

## சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட
# 21 பாடசாலை அணிகளின் உதைபந்தாட்டப் போட்டிகள்

## நாளை மறுதினம் ஆரம்பம்

வலிகாமம் தெற்கு, செப். 17
சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகி ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

14 வயது, 16 வயது, 18 வய ஆகிய மூன்று அணிகளின் கீழ் 21 பாடசாலை அணிகள் உதைபந்தாட்டப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

14 வயதுப் பிரிவில் மூன்று பிரிவுகள் இடம்பெறுகின்றன. 'ஏ' பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிகளும், 'பி' பிரிவில் பண்டத்தரிப்பு ஜெசிந்தா ஆர்.சி, மாதகல் சென். ஜோசேப் வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆகியவையும் 'சி' பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, சில்லாலை ஆர். சி., மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை என்பனவும் பங்குபற்றுகின்றன.

16 வயதுப் பிரிவில் இரண்டு பிரிவுகள் இடம்பெறுகின்றன. 'ஏ' பிரிவில், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி என்பனவும், 'பி' பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு ஜெசிந்தா ஆர். சி., பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மாதகல் சென். ஜோசேப் வித்தியாலயம் என்பனவும் பங்குபற்றுகின்றன.

18 வயதுப் பிரிவில் இரண்டு பிரிவுகள் இடம்பெறுகின்றன. 'ஏ' பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி என்பனவும், 'பி' பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை என்பனவும் பங்குபற்றுகின்றன.

உதைபந்தாட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானங்களில் பிற்பகல் 2. 30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (க-152)

## கோழிக்குஞ்சு விநியோகம்

வலிகாமம் தெற்கு சுன்னாகம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் எதிர்வரும் 26, ஆம் 27 ஆம் திகதிகளில் கோழிக்குஞ்சுகள் விநியோகம் இடம்பெற உள்ளது.

இந்தச் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ள பண்ணையாளர்களுக்கு மட்டுமே கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புறொயிலர், லேயர், சேவல் ஆகிய ஒருநாள் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

வளர்குஞ்சுகளுக்குத் தேவையான ஆரம்ப உணவு, தீனி வகைகளும், கால்நடைகளின் நோய்களுக்கான மருந்துகளும் மேற்படி சங்கத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சங்கத்தில் புதிதாகச் சேரும் அங்கத்தவர்களுக்கான பதிவுகளும் நடைபெற்று வருகின்றன. (க-152)



கரவெட்டி பிரதேச சபைக்கு ஒரு கோடி 10 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் மாடிக் கட்டட அலுவலகத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் மாலு சந்தியில் அண்மையில் நடைபெற்றது. பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை மங்கள விளக்கேற்றி வைப்பதையும் பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் அடிக்கல்லை நட்ட கரவெட்டி பிரதேச சபை உபதலைவர் சில்வெஸ்டர் அன்ரன் ஜூட் (உதயன்), பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சிவகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



சங்கானை இந்து இளைஞர் மன்றத்தினரும் இந்து மகளிர் மன்றத்தினரும் இணைந்து அண்மையில் இரண்டாவது ஆண்டு கலை விழாவைக் கொண்டாடினர்.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சிவத்தமிழ் மணி பண்டிதை திருமதி பொன். பாக்கியம், சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன் மற்றும் மாவடி ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.சிவசுப்பிரமணியம் ஆகியோருடன் இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (ஜ)

**யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி**
**உரிமையாளர், சாரதிகள், ஊழியர்கள் நலன்புரிச்சங்கம்**

**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2001**

காலம் :- 23.09.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணி (இ.நே.)
இடம் :- வை.எம்.சி.ஏ.மண்டபம், கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தலைவர் :- திரு.வீ.குமாரசாமி அவர்கள்.

*சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.*

*215,பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்* (92377)
க.செல்வராஜா,
செயலாளர்

## பிறந்தநாள் நினைவு தினம்

**அமரர் LION Dr.தம்பிஐயா அருமைத்துரை (R.M.O.)**

தோற்றம்: 17.09.1941 மறைவு: 03.06.2001

டாக்டர் அருமைத்துரை ஐயா அவர்களின் 60ஆம் ஆண்டு பிறந்ததினத்தை நினைவுகூரும் இந்நாளில், அவர் சங்கானை அரசினர் வைத்தியசாலையிலே பணிபுரிந்த காலத்தில் கடமையில் கண்ணியமாக ஆற்றிய சேவையைத்தான் மறக்கமுடியுமா? அன்புள்ளங்களிலிருந்து அவரைப் பிரிக்க முடியுமா? மரணமெனும் முடிவினிலே இறைவன் அவரை அழைத்துச்சென்று 104 நாளகள் ஓடிவிட்ட போதினிலும் அன்பார்ந்த எம் நெஞ்சைவிட்டகலாது அவரின் அன்புருவம்.

அன்னாரை எந்நாளும் நினைவு கொள்வோம். அன்புள்ளங்களே,

*'மனிதன் மறைந்தாலும் மாண்டாலும் மாளாது அவன் ஆற்றிய நற்செய்கை'*

*சங்கானை அரசினர் வைத்தியசாலை*
*அபிவிருத்திச் சங்கம்,*
*சங்கானை.* (92376)
என்றும் நினைவில் கொள்ளும்:
சக டாக்டர்களும், ஊழியர்களும்,
சங்கானை வாழ் மக்களும்.

## மரண அறிவித்தல்

**திருமதி நளினி பிரியதர்சினி வரதராஜன்**

*(சீமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை)*

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்டு, தற்போது கொழும்பில் வசித்துவந்தவராகிய திருமதி நளினி பிரியதர்சினி வரதராஜன் 11.09.2001 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வரதராஜனின் (தபாலதிபர், செவ்வளுப்பிட்டி) அன்பு மனைவியும், ஆதவவிருட்சனின் (கொழும்பு தேசிய பாடசாலை) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கருணாநிதி (வியோ.சேவை உத்தியோகத்தர்) மற்றும் தனேந்திரன் (கனடா), சுசீந்திரன் (மாலைதீவு), திலகாம்பிகை (நல்லூர்), அமிர்தாம்பிகை (கந்தரோடை), தயாபரன் (கனடா), மோகன் (மாநகரசபை மேற்பார்வையாளர்) ஆகியோரின் பண்புமிகு மைத்துனியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் தங்கம்மாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2001) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகக்குணை,*
*கந்தரோடை.* (92373)
தகவல்:
திருமதி உருத்திரன் அமிர்தாம்பிகை

# யாழ்.கலைஞர்கள் குழு நாளை திருமலை புறப்பாடு

## கொழும்பிலும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.17

கொழும்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நாட்டுக்கூத்து, இசைநாடகங்கள் என்பனவற்றை மேடையேற்றுவதற்கென பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் குழுவொன்று நாளை செவ்வாய்க் கிழமை கப்பல் மூலம் திருகோணமலை செல்லவுள்ளது.

கழகத்தின், செயலாளர் செல்லையா மெற்றாஸ்மயில் தலைமையில் செல்லும் இந்தக் குழுவில் கலாபூஷணம் சின்னமணி, அரியாலையூர் நடிக கலாமணி வ.செல்வரத்தினம், பாஷையூர் அண்ணாவியார் வ.அல்பிரட், அரிச்சந்திர மயான காண்டம் புகழ் எஸ்.தைரியநாதன் மற்றும் கலைஞர்கள் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

இந்தக் குழுவினர் எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும், 28ஆம் திகதி மருதானை டவர் மண்டபத்திலும் "சத்தியவான் சாவித்திரி", "வேழம்படுத்த வீராங்கனை" ஆகியவற்றை மேடையேற்றுவர். அத்துடன் ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் முறையே ஒளி, ஒலிப் பதிவுகளையும் மேற்கொள்வர்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் இலக்கிய விழாவில் கலந்துகொள்ளும் இந்தக் குழுவினர் "ஸ்ரீவள்ளி" இசைநாடகத்தை அங்கு மேடையேற்றுவர்.

தொடர்ந்து திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவினரது கப்பல் போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒழுங்கு செய்துள்ளார். (க-7)

## நீதிமன்றத்தை அவமதித்தவருக்கு ரூ.1000 அபராதம்

வலி.வடக்கு,செப்.17

நீதிமன்றத்தை அவமரியாதை செய்ததாகக் குற்றம்சாட்டி பிணையில் விடப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் ஐந்து வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட மூன்றுமாத கடுழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற 'பிஸ்கால்' கொண்டு சென்ற கட்டளையை ஏற்க மறுத்ததுடன் கட்டளைச் சேவகரை அவமரியாதை செய்தமையையும் தொடர்ந்து அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் என்பவருக்கே மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் இந்தத் தண்டனையை விதித்து எச்சரிக்கையும் செய்துள்ளார். (க-86)

## 5 வருடம் பணிபுரிந்த அரச ஊழியர்கள் இடமாற்றப்படுவர்

யாழ்ப்பாணம்,செப்.17

அரச திணைக்களங்களில் 5வருடங்களுக்கு மேல் பணியாற்றிய இணைந்த சேவைகள் சார் திணைகள சேவைகள் சார் அலுவலர்கள் 2002ஆம் ஆண்டிலிருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான இடமாற்ற விண்ணப்பங்கள், திணைக்களத் தலைவர்களூடாக வடக்கு-கிழக்கு மாகாண அரசினால் கோரப்பட்டுள்ளது.

அநேகமான திணைக்களங்களில் சுமார் 8 வருடங்களுக்கு மேலாக பல ஊழியர்கள் தொடர்ந்து சேவையாற்றி வருவது தெரியவந்துள்ளது.

இது சம்பந்தமான சுற்றுநிருபம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் வடக்கு-கிழக்கு மாகாண அரசினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-100)

## இருபாலை கிழக்கில் தண்ணீர்த் தட்டுப்பாடு

கோப்பாய்,செப்.17

இருபாலை கிழக்குப் பகுதியில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக இப்பகுதியில் நல்ல தண்ணீர்க் கிணறுகள் வற்றியும் உவர்த்தன்மை அடைந்துமுள்ளன. இதனால் பொதுமக்கள் தண்ணீர் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ஐ-72)

## கவிதை, கட்டுரை போட்டிகளை கலைக்கழகம் நடத்தும்

குருநகர்,செப்.17

மறைந்த றெக்கிளமேசன் கிழக்கு கிராம உத்தியோகத்தர் றோமான் அன்ரனி (இதயன்) ஞாபகார்த்தமாக குருநகர் இளைஞர் கலைக்கழகம் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளதாக குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் தலைவர் சீ.எம்.நெல்சன் தெரிவித்தார். (க-51)

# வாசகர் திருமுகம்

## நல்லதொரு சந்தர்ப்பம் கைநழுவிப் போய்விட்டது

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளி அடிப்படையில் தகுதிகாண் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை அடுத்து பல்கலைக்கழகத்திலும் கல்வியியற் கல்லூரியிலும் கல்வி பயில்பவர்களே இதற்கு விண்ணப்பித்தனர். இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் அனேகரும் மேற்கூறப்பட்டவர்களே.

ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றவர்களையே தெரிவுசெய்துள்ளார். அவரிடம் ஆண்டுதோறும் வெளியாகும் வெட்டுப்புள்ளி அட்டவணை இல்லையோ தெரியாது. அவரின் தெரிவு முழுவதும் பல்கலைக்கழகத்தில் உள்வாரியாகக் கல்வி பயில்பவர்களாகவே உள்ளது.

பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றவர்களுக்கு பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்படுவதைச் செயலாளர் மறந்துவிட்டார் போலும். இவ்வாறு தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்கள் நான்கு ஆண்டுகளின் பின்பே பட்டதாரி ஆசிரியர் சம்பளம் பெறமுடியும்.

எது எப்படியிருந்த போதும் ஜி.சீ.ஈ. உயர்தரம்வரை கல்வி கற்றவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை செயலாளர் கெடுத்துவிட்டார் என்றே கூறவேண்டும்.

தற்போது பல்கலைக்கழகம் செல்பவர்கள் பல பொய்களைக் கூறி மெய்யான நியமனம் பெற வழி சமைத்துள்ளார்கள். வேறு மாகாண சபைகளில் உறுப்பினர்கள், மாகாண முதல்வர் என்று பலர் செயலாளரைத் தட்டிக் கேட்பார்கள். ஆனால் வடக்கு - கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் தன்னிச்சையாக - சர்வாதிகாரியாக நடந்துகொள்வதாகப் பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஆலய உற்சவ காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் படையெடுப்பது வழக்கம். அச்சமயம் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளை அதிகாரத் தோரணையுடன் அடக்கி ஆள்வார்கள். பின்பு தீர்த்தோற்சவம் முடிவடைந்ததும் மீளவும் திரும்பிவிடுவார்கள். அங்கு சென்றதும் பழையபடி தமது திருவிளையாடல்களை இவர்கள் ஆரம்பித்து விடுகின்றனர்.

இங்கு கூறிய உறுதிமொழிகள் காற்றில் விடப்படுவதே நித்திய நிகழ்வாகிவிட்டன. கண்துடைப்புக்குக் குறைகேள் நடமாடும் சேவையொன்றை நடத்தி பிரச்சினைகளைத் தீர்த்ததாக செயலாளர் கூறியுள்ளார். ஆனால் எதுவும் தீர்ந்தபாடில்லை.

*புலோலி.* **அரசன்.**

## யார் இவர்களைத் திருத்துவது?

பாடசாலைகளில் மூன்றாம் தவணை ஆரம்பித்துவிட்டது. வகுப்பேற்றப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் கவனமாகப் படிக்க வேண்டும். அவர்கள் படிப்பதற்கு அமைதியான சூழ்நிலை வேண்டும்.

ஒலிபெருக்கிகள் சூழலின் அமைதியைக் குலைப்பது பற்றி கடிதங்களும் செய்திகளும் 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் அதைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. இரவு மூன்று மணிக்குக் கூட காண்டாமணியைப் போட்டு அடிப்பதும் பாடல்களை ஒலிபெருக்கியில் அலற விடுவதும் தொடர்கிறது.

இதைவிட புதிய தொல்லையும் தற்போது தொடங்கியிருக்கிறது. சாமம் சாமமாக இசை, நாடக நிகழ்ச்சிகளை நடத்தி இரவு முழுக்க ஒலிபெருக்கிகளை அலறவிட்டு சனங்களை நித்திரை கொள்ளவிடாமல் இம்சைப்படுத்துவதே அது.

சனங்களை உறங்கவிடாமல் அவர்களின் நிம்மதியைக் குலைத்து இம்சைப்படுத்துவது தர்மத்தின் வழியிலும் சட்டத்தின் வழியிலும் குற்றமாகும்.

திருவிழாக்களையும் இசை, நாடக நிகழ்ச்சிகளையும் தாராளமாக நடத்துங்கள். ஆனால் எட்டுத் திக்கும் ஒலிபெருக்கிகளை அலறவிட்டு சனங்களை இம்சைப்படுத்தாதீர். வழிபாட்டுத் தலங்களில் கூடும் பக்தர்களுக்கும் அரங்கின் பார்வையாளர்களுக்கும் மட்டும் ஒலி கேட்டால் போதுமானது என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

*சுன்னாகம்.* **அ.பரம்.**

## எப்போது கிடைக்கும் அடையாள அட்டைகள்?

கடந்த மே மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியிலே வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் மக்கள் குறைநிவர்த்தி சேவை நடத்தப்பட்டது.

பல்வேறு பிரச்சினைகளுக்குரிய காரணங்கள் குறைநிவர்த்தி சேவையில் ஆராயப்பட்டதுடன், தேசிய அடையாள அட்டைகள் உடனடியாக அங்குவைத்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை அடுத்து அன்றைய தினம் தேசிய அடையாள அட்டைப் பிரிவுக்கே அதிக எண்ணிக்கையான மக்கள் சமுகமளித்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

ஆனால் உடனடியாக அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை. விண்ணப்பங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு 2 வாரங்களில் அடையாள அட்டை அனுப்பி வைக்கப்படும் எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது. எனினும் மூன்று மாதங்கள் கழிந்தும் இதுவரை அடையாள அட்டைகள் வந்து சேரவில்லை.

இன்றைய சூழ்நிலையில் அடையாள அட்டையின் முக்கியத்துவத்தை புரிந்து உரிய அமைச்சர் அல்லது அரசாங்க அதிபர் விரைவில் அடையாள அட்டை கிடைக்க ஆவன செய்வார்களா?

*காரைநகர்.* **ரி.சோதி**

# மீசாலையில் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

## கிரனேட் வீச்சில் 3 சிப்பாய்கள் காயம்

கொழும்பு,செப்.17

மீசாலைப் பகுதியில் நேற்றுமுன் தினம் அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் படையினர் மூவர் காயமடைந்த தாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்திருக்கிறது.

முன்னரங்க நிலையில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்ததாகவும் -

நடமாட்டம் காணப்பட்ட பகுதியை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள் மற்றும் கிரனேட் கொண்டு தாக்கியதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கிரனேட் தாக்குதலால் காயமடைந்த மூன்று படையினரும் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

மீசாலை மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் காலை முதல் நண்பகல் வரை படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

(ஐ-3-31)

# தமிழகத்தில் இருந்து குடாநாட்டுக்கு 50 ஆயிரம் 'பக்கெட்' சிமெந்து

## கப்பல் மூலம் நேரடியாகத் தருவிப்பு

இந்தியாவில் இருந்து 50 ஆயிரம் 'பக்கெட்' சிமெந்து 'இந்துருவலி' கப்பல் மூலம் காங்கேசன்துறை முகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள துறைமுகம் ஒன்றில் இருந்து இந்தச் சிமெந்தை ஏற்றிக்கொண்டு 'இந்துரு வலி' கப்பல் நேரடியாக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க இந்தச் சிமெந்து எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் கடந்த காலங்களில் இதுபோன்று கட்டடப் பொருள்கள் இந்தியாவில் இருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்தன. ஆனால் அவற்றை இங்கு எடுத்து வருவதற்கான கப்பல்கட்டணம் காரணமாக அவை கொழும்பிலேயே விற்பனை செய்யப்பட்டு அதன்மூலம் கிடைத்த நிதிமூலம் இங்கு பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுப் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

தற்போது இந்தியாவில் இருந்து நேரடியாகவே காங்கேசன்துறைக்கு சிமெந்து எடுத்துவரப்பட்டுள்ளது.

(ஐ-3)

### துணைப்படையினர் மூவர் உயிரிழப்பு

வவுனியா,செப்.17

மணலாறுப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் தமிழீழ தேசிய துணைப்படையைச் சேர்ந்த 2 ஆம் லெப்டினன்ட் தமிழ்ச்செல்வன் (ராசு தமிழ்ச்செல்வன் - யாழ்ப்பாணம்), 2 ஆம் லெப்டினன்ட் பாலகிருஷ்ணன் (ராமையா பாலகிருஷ்ணன் - யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் ஞானசேகரன் (சோமு ஞானசேகரன் - ஆனையிறவு) ஆகியோர் களப்பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-3)

### இராணுவ வாகனம் விபத்து

பொலிகண்டியில் எரிஞ்ச அம்மன் கோயிலடிப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவ வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது.

இதனால் படையினருக்கு உயிரச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

(ஐ-31)

### 'கிபிர்' விமானங்கள் நோட்டம்

வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகள் மீது நேற்று முற்பகல் 'கிபிர்' குண்டுவீச்சு விமானங்கள் பறந்து வட்டமிட்டன. (ஐ-31)

### தபாலகத்தில் தொலைபேசி இயங்கவில்லை

வேலணை தபாலகத்தில் தொலைபேசி கடந்த எட்டு மாதகாலமாக செயலிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எட்டு மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்த தொலைபேசி இதுவரை திருத்தப்படவில்லை என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் திருநாவுக்கரசு குகன்

(லண்டன்)

லண்டனில் வசித்தவரான உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருநாவுக்கரசு குகன் அவர்கள் கடந்த மாதம் இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து எமது இல்லம் நாடிவந்து துயரில் பங்குகொண்டு எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் சபிண்டீகரணக் கிரியைகள் நேற்றுமுன்தினம் லண்டனில் நடைபெற்றன.

மா.நற்குணம்,
மா.நித்தியானந்தம்.
(மாமன்மார்)

*உரும்பிராய் தெற்கு.* (92387)

### குப்பிவிளக்கு தவறிவீழ்ந்து பெண்ணுக்குத் தீக்காயம்

நெல்லியடி,செப்.17

எரிந்துகொண்டிருந்த குப்பிவிளக்கு தவறுதலாக சரிந்து வீழ்ந்ததினால் உறங்கிக் கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு 9.30 மணியளவில் கச்சாய் தெற்கு, கொடிகாமத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த க.பராசக்தி (வயது 45) என்பவரே எரிகாயங்களுடன் அன்றிரவு மந்திகை மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

### முகமாலையில் இரு படையினர் காயம்

கொழும்பு,செப்.17

முகமாலை முன்னரங்க படைநிலைகள் மீது நேற்றுமுன்தினம் காலை 6 மணிக்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலில் இரு படையினர் காயம் அடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

அதேதினம் அதே பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர் என்றும் -

இந்த மோதலில் போது சிப்பாய் ஒருவர் ஆள்களுக்கு எதிரான கண்ணியில் சிக்கிக் காயம் அடைந்தார் என்றும்-

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(ஐ-3)

### வீதி பலத்த சேதம்

அச்சுவேலி,செப்.17

அச்சுவேலி கிழக்கு, நாச்சிமார் கோயில் கொள்ளையன் தூவு வீதி மற்றும், பாலம் என்பன திருத்தி அமைக்கப்படாமையினால் வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும விவசாயிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையின் போது வீதியில் அமைந்திருந்த பாலம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. வீதி சேதமடைந்த நிலையில் உள்ளது. குண்டு வீச்சினால் வீதியில் பாரிய குழி ஏற்பட்டுள்ளது.

(ஐ-11)


NEW SCIENCE COLLEGE
JAFFNA
PHYSICS
PAPER CLASS - 1
2002 A/L
அலகுரீதியான மீட்டல்
Tue., Thu., 6 - 7 a.m.
❖ வெப்பவியல் ❖
ஆரம்பம்: 18.09.2001
2001 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான வகுப்புகள்
Sat., Sun. 11.00 - 12.00
ஆரம்பம்:- 22.09.2001
By.M.KARUNANITHY

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன், சோனாலி மற்றும் பலர் நடிப்பில்
கண்ணோடு காண்பதெல்லாம்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/18274)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி நடிப்பில்
மன்னன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(92353)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு செல்லம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு செல்லம்மா நேற்று (16.09.2001) ஞாயிற்றுக் கிழமை வல்வெட்டியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும், நடராசா (ஆஸ்திரேலியா), இராஜயோகம் (பிரான்ஸ்), கனகரத்தினம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜெயசிங்கம், மகேஸ்வரராஜா, இராசலட்சுமி, புவனலட்சுமி (கனடா), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுசிலாதேவி (ஆஸ்திரேலியா), விஜயலட்சுமி, இந்திராதேவி (ஆசிரியை, மட்டுவில், ம.வி.), சிவமலர், அமிர்தலிங்கம், விக்கினேஸ்வரன் (கனடா), அகிலன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் மாமியாரும், காயத்திரி (ஆஸ்திரேலியா), சசிலேகா (ஜேர்மனி), சசிதரன் (லண்டன்), சசிரூபன் (லண்டன்), சுபாஜினி (யாழ்.பல்கலைக்கழகம்), தர்சினி (யாழ்.பல்கலைக்கழகம்), சபேசன் (யாழ்.பல்கலைக்கழகம்), ஜசிந்தன், மிதிலா, ஜனந்தன் (கனடா), சுகிந்தன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), கேசவன், யசோதா, சங்கீதா, கவிதா, சிறியா, நிருஷா (கனடா), மகேசன் (கனடா), அனந்தன் (கனடா), லக்ஸன் (பிரான்ஸ்), லக்ஷியா (பிரான்ஸ்), சுபேந்திரன் (ஆஸ்திரேலியா), ஜெயம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், கார்த்திகா, (ஜேர்மனி), மேனகா (ஜேர்மனி), லக்சிகா (லண்டன்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2001) திங்கட்கிழமை பகல் 10.00 மணிக்கு வல்வெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"துவாரகை",*
*தெனியம்மை வீதி,*
*வல்வெட்டி, வல்வெட்டித்துறை.*

தகவல்:
பிள்ளைகள்.

(92381)

## நாகமணி செல்லையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்தவரான நாகமணி செல்லையா அவர்கள் 15.09.2001 சனிக்கிழமை இரவு இறைவன் திருவடி சேர்ந்தார்.

இவர் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் ஈஸ்வரி (FRANCE), நிர்மலாதேவி, திலகவதி (JAFFNA), மகேந்திரன் (LONDON), அமலேந்திரன், (FRANCE) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா (FRANCE), கிருஷாந்தி (LONDON), ஜெசிகலா (FRANCE) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜி (ஆசிரியை - கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்), பிரியா (FRANCE), கீரன் (FRANCE), நிலக்சி (LONDAN), ஷேகா (LONDON), பிரபா (உரிமையாளர் - நியூ ரேடியம்ஸ் ரெக்ஸ்ரைல், கொழும்பு), செல்வன் (FRANCE), சுகி (FRANCE) ஆகியோரின் அன்புப் பேரனும் அக்ஷனியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தற்போதைய முகவரி:-
**PRIYA,**
**47/27, Metha Wellikada Rd,**
**1St Lane, Salmal Place,**
**Rajagiriya.**

தகவல்:
தங்கராஜா திலகவதி
நிரந்தர முகவரி:-
*NO.2, 3 ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(92386)

## திருமதி ஆறுப்பிள்ளை சீதேவன்

(செல்லம்மாக்கா ரீச்சர்)

அளவெட்டி வடக்கு,டச்சு வீதியைச் சேர்ந்த திருமதி ஆறுப்பிள்ளை சதேவன் (செல்லம்மா - ஓய்வுபெற்ற ஆசிரியர் சதானந்தா வித்தியாசாலை, அளவெட்டி) அவர்கள் நேற்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.40 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் வே.ஆறுப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர், அருணோதயாக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குகானந்தன் (பொறியியலாளர் - லங்கா சிமெந்து லிமிட்டெட்) இளங்கோ (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் தாமு சரவணமுத்து (மலேசியா), திருமதி ஆறுமுகம் நாகம்மா (மட்டுவில்), திருமதி வீரசிங்கம் சின்னம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சுலோசனா குகானந்தன் (கொழும்பு), திருமதி கலையரசி இளங்கோ (ஆசிரியை, அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அருமைமாமியும் நிருஷன், குகானந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு வீதி,*
*அளவெட்டி.* (92383)

தகவல்:
கணவன் - வே.ஆறுப்பிள்ளை
மகன் - ஆ.இளங்கோ.

## சண்முகம் நல்லையா

31/7,இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய சண்முகம் நல்லையா நேற்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் (பாக்கியம்) அன்புக் கணவரும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் புஸ்பராசா, பூபாலசிங்கம் ஜேர்ம்னியில் வசிக்கும் சரோ, வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தங்கராசா, இராயேஸ்வரி, செல்வராணி, யோகேஸ்வரன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*31/7,இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.* (92388)

தகவல்:
பூபாலசிங்கம் (மகன்)

## கந்தையா மயில்வாகனம் (ஆசிரியர்)

சுதுமலை தெற்கு, எச்சாட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் (ஆசிரியர்) நேற்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் (ஆசிரியை) அன்புக் கணவரும், திரவியம் (பிரான்ஸ்), சிறிதரன் (பிரான்ஸ்), தாரணி (ஜேர்மனி), சரவணபவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனராஜ் (பிரான்ஸ்), சின்னராஜ் (ஜேர்மனி), இந்திரா (பிரான்ஸ்), நிர்மலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிளா, சமினா, சிந்துஜா, தீவிதா, பிரதாப், பிரவீண், சுஜின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.09.2001) கோப்பாயில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நாவற்கட்டை., கோப்பாய்.* (C/18303)

தகவல்:
கந்தசாமி (மருமகன்)

மட்டக்களப்பில் கடந்த புதனன்று

# பெண்கள் படையணித் தளபதியும் ஐந்து போராளிகளும் உயிரிழப்பு!

வவுனியா,செப்.17

மட்டக்களப்பில் அரங்கன்வில என்னும் இடத்தில் கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அன்பரசி படையணியின் தளபதி லெப்டினன்ட் கேணல் சிவகாமி உட்பட ஆறு போராளிகள் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

லெப்டினன்ட் கேணல் சிவகாமி (சின்னத்துரை சிவகாமி - மட்டக்களப்பு), கப்டன் கலைவிழி (சங்கரப்பிள்ளை பவளக்கொடி - மட்டக்களப்பு), லெப்டினன்ட் அருமைநாயகி (கந்தபோடி தனலட்சுமி - மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் திசானா (கிருஷ்ணபிள்ளை கலைவாணி மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் அகநிலா (காசவதி ஜெயா - மட்டக்களப்பு), சந்திரவதி (செல்லத்தம்பி வனிதா - மட்டக்களப்பு) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

(ஐ-3)

# கொழும்பில் பஸ் விபத்தில் பத்துப் படையினர் காயம்

கொழும்பு,செப்.17

கொள்ளுப்பிட்டி டுப்ளிக்கேஷன் வீதியில் நேற்றுக்காலை 5.15 மணியளவில் படையினர் பயணம் செய்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 10 படையினர் காயமடைந்தனர்.

படையினர் பயணம் செய்த பஸ் வண்டி கடற்படையினரின் பஸ் ஒன்றுடன் விபத்துக்குள்ளானதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த படையினர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

# திருமலை - கண்டி வீதியில் 10 மணிவரை போக்குவரத்து

## விரைவில் படையினர் அனுமதி

திருகோணமலை,செப்.17

திருகோணமலை - கண்டி வீதியில் இரவு 10 மணிவரை போக்குவரத்துச்செய்ய விரைவில் அனுமதி வழங்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராட்சி இத்தகவலைத் தெரிவித்தார்.

திருமலை மாவட்ட தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் கடந்த வியாழனன்று பிளாண்டன்ட் பொயின்ற் படைமுகாம் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே இணைப்பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலை - கண்டி வீதியில் தற்சமயம் இரவு 9 மணிவரை மட்டுமே பயணம் செய்யமுடியும்.

அந்த வீதியில் 96 ஆவது மைல்கல் படைமுகாமுக்கு முன்னால் இரவு 9 மணியுடன் போக்குவரத்து தடை செய்யப்படுகிறது.

(ஐ-145)

### திஸநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும் தம்பக்கம் சேர்த்துக் கொண்டு புதிய கட்சியை உருவாக்க எஸ்.பி.திஸநாயக்கா தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆரம்பிக்கவிருக்கும் புதிய கட்சிக்கு 'ஐக்கிய தேசிய முன்னணி' எனப் பெயரிடப்படவுள்ளது.

(ஐ-9)

### உறவினர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்ததோ ஏது நடந்ததோ என்பது தெரியாது அவர்கள் பெரும் பீதியும் கலக்கமும் அடைய நேர்ந்தது.

'லங்கா முதித்த' கப்பல் தாக்கப்பட்டிருக்கலாம் என நம்பியோர் கப்பலின் கதியை அறிவதற்காக 'உதயன்' அலுவலகத்துடன் நேற்றுத் தொலைபேசியில் அடிக்கடி தொடாபு கொண்டபடி இருந்தனர்.

நேற்று முன்னிரவு வரை இவ்வாறு தொலைபேசி அழைப்புக்கள் 'உதயன்' அலுவலகத்துக்கு வந்தபடி இருந்தன.

(ஐ)

### துருப்புக்காவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன. தாக்குதலுக்கு இலக்கான கப்பல் பலத்த பாதுகாப்புடன் நேற்று மாலை காங்கேசன்துறை துறைமுகததுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 11 படையினர் உயிரிழந்தனர்; 60 படையினர் காயமடைந்தனர் என்றும் -

'டோறா' படகு ஒன்றுடன் 7 கடற்படையினரைக் காணவில்லை என்றும -

படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தக் கடற்சண்டையில் 18 கடற்படை மாலுமிகள் காணாமற் போய்விட்டதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

குண்டு வீச்சு விமானங்களும் 'எம்.ஐ.24' ரகக் ஹெலிகளும் நேற்றைய தாக்குதலின் போது படையினருக்கு உதவியாக நடவடிக்கையில் ஈடுபட்டன.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் 15 உறுப்பினர்கள் உயிரிழந்தாக படைத்தரப்பு அறிவித்த போதும் இத்தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ அறிவிப்பு ஏதும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

நேற்றைய சண்டையில் மூன்று கடற்படை அதிகாரிகள் உட்பட 12 படையினர் உயரிழந்தாக ஒரு செய்தி தெரிவித்து.

(ஐ-3-9)

### இருபது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமனம் குறித்து நேற்று வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில் -

உல்லாசப் பயணத்துறை, விமான மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அமைச்சராக ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்றுப் பதவியேற்றிருக்கிறார்.

அதேசமயம், அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இருந்த அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி திடீரெனத் தம்வசம் எடுத்திருக்கின்றார். அவர் பிரதியமைச்சர் பதவியையே வகிக்கவுள்ளார்.

இதேவேளை -

ஆறுமுகம் தொண்டமான் இன்று அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் அமைச்சர்களின் எண்ணிக்கை இருபதைத் தாண்டப்போவது தெளிவாகத் தெரிகின்றது.

இந்நிலையிலேயே 'இருபது இருபதுதான்' என்ற தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று விமல் வீரவன்ஸ திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

"அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபின் அது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளிவர வேண்டும். இருபது உறுப்பினர்களுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருப்பது வர்த்தமானி மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நாங்கள் அதற்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுப்போம் என்றும் அவர் கூறியிருப்பதாக இணையச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(ஐ-3)

# 'சிலப்பதிகாரம்' விரைவில் சிங்கள மொழியில்

## மத்திய மாகாண சபை நடவடிக்கை

திருகோணமலை,செப்.17

தமிழ் மொழி இலக்கியமான சிலப்பதிகாரத்தை சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் சஞ்சீவ கவிரட்ண தெரிவித்தார்.

மத்திய மாகாண இலக்கிய விழா கடந்த சனிக்கிழமை மாத்தளை முத்து மாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கவிரட்ண அங்கு உரையாற்றுகையில் பௌத்த மத கோட்பாடுகளை விளக்கும் வகையில் அமையப்பெற்றுள்ள சிலப்பதிகாரத்தில் நல்ல கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவை பற்றி பௌத்த மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். சிங்கள மொழி மூலம் இல்லாமையால் அவர்களால் சிலப்பதிகாரம் பற்றி அறிந்து கொள்ள முடியாமல் உள்ளது. இதனை மொழி மாற்றம் செய்ய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மத்திய மாகாண சபை இதற்கான நடவடிககைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ் மொழியில் காணப்படும் ஏனைய நல்ல இலக்கியங்களும் இதனைத் தொடர்ந்து மொழிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

மத்திய மாகாண இலக்கிய விழா தமிழ் கலாசார அமைச்சர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அதிதிகள் அனைவரும் மாத்தளை பேர்னாட் அலுவிகார மைதானத்தில் இருந்து விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். மத்திய மாகாண கலாசாரத்தை பிரதிபலிக்கத்தக்கதான பல்வேறு ஊர்திகள், நடனங்கள், என்பனவும் ஊர்வலத்தில் இடம் பெற்றன.

(ஐ-145)

ஆணைக்குழுக்களைக் கண்காணிக்கும்

# அரசமைப்புச் சபை உறுப்பினரை தெரிவு செய்வதில் சிக்கல்நிலை

கொழும்பு,செப்.17

நீதி, பொலீஸ், தேர்தல், பொதுச் சேவை ஆகியன தொடர்பான சுதந்திர ஆணைக்குழுக்களைக் கண்காணிக்கும் அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் சிக்கல் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரசமைப்புச் சபைக்கு பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் தலா மூன்று உறுப்பினர்களை நியமிப்பர் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது ஜனாதிபதியும் ஓர் உறுப்பினரை நியமிக்க வேண்டும் என்று அரசு கூறியுள்ளது.

இந்த யோசனையை ஐதேகட்சி நிராகரித்துள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து ஜே.வி.பி. இன்று அரசுடனும் ஐ.தே.கட்சியுடனும் கலந்துரையாடவிருக்கின்றது.

(ஐ-3)

## அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

(ஐ-4)

### திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இதேவேளை -

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் கடற்கரும்புலி தமிழினியன் அலலது பொதியரசன் (செல்வரத்தினம் யோகேஸ்வரன் - யாழ்ப்பாணம்), கடற்கரும்புலி ஓசை இனியவன் (ரத்தினம் ராஜ்குமார் - யாழ்ப்பாணம்) ஆகியோர் களப்பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ஐ-3-9)

### 783 பயணிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகத்தை நோக்கி வந்ததாகவும் -

இதனால் கப்பல் இங்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டதாகவும் - கூறப்பட்டது.

இதேவேளை -

திருகோணமலையில் இருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் வழமை போல் இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் என்று திருகோணமலை பிரதேச செயலர் வேலும்மயிலும் நேற்றிரவு தெரிவித்தார்.

(ஐ-3)

## கண்ணீர் அஞ்சலி

15.09.2001 அன்று அகாலமரணமான

**முத்துலிங்கம் அருளானந்தம்**

**(கண்ணன்)**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கோணேஸ்
(கொழும்பு)

(C/18305)

## மரண அறிவித்தல்

**திருமதி கந்தசாமி பரமேஸ்வரி**

துன்னாலை, அல்லையம்பதியினை வதிவிடமாகக் கொண்ட திருமதி கந்தசாமி பரமேஸ்வரி நேற்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், நித்தியானந்தன் (மட்டக்களப்பு), நிர்மலாதேவி, நிவானந்தன் (லண்டன்), நிமாலினி (லண்டன்), விவேதினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினறஞ்சினி, கருணாநிதி (இலங்கை வங்கி, நெல்லியடி), வானதி (லண்டன்), பாலகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரசேகரம் (கௌரி ரேடேர்ஸ், கொழும்பு), குலசேகரம், திருமதி பா.இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கவிதா, கனேந்திரா, ரதீஸ், றமேஸ், நீரயா, நீரஜன், சளிதா, வித்தியா ஆகியோரின் பேர்த்தியும் ஜதூசனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.கருணாநிதி
(மருமகன்)
(இலங்கை வங்கி, நெல்லியடி)

அல்லையம்பதி,
துன்னாலை.

(C/18306)

எமது புதிய
வீடியோ CD வெளியீடுகள்
உன்னில் என்னை கண்டேன
வீட்டோட மாப்பிள்ளை
ருத்ரன்
ராமன் தேடிய ரம்பா
(C-18304)

NIDUSHA STUDIO & VIDEO
MAIN STREET - NELLIADY
யாழ்.பல்கலைக்கழக 20 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
அன்றையதினம் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளை மனதார வாழ்த்துகின்றோம்.
இப்பொன்னான நிகழ்வை உள்ளக வீடியோப் படம் பிடிப்பதற்கு எங்களுக்கு மட்டும் அனுமதி கிடைத்துள்ளதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
இந்நிகழ்வின் வீடியோப் பிரதிகளை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் முற்கூட்டியே பதிவு செய்து உறுதி செய்து கொள்ளவும்.



என்றும் உங்களுடன்
நிதுஷா ஸ்ருடியோ & வீடியோ
பிரதான வீதி, நெல்லியடி
(92357)

ஆரம்பமாகிறதா???
ஆம்! ஆம்!! ஆம்!!!
A/L 2002
18.09.2001 → Tue → 4.15 p.m.
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
(92375)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
By: Mr.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
18.09.2001
செவ்வாய் மாலை 4 மணி
HARY'S INSITUTE
KONDAVIL EAST, KONDAVIL.
(92380)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.